புதினப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது. உ ஆரம்பமானது: விரோதி௵ (1889) ஆவணிமீ௴ உ௪உ

"எனைத்தானு நல்லவை கேட்க அனைத்தானும், ஆன்ற பெருமை தரும்"

THE SAIVA PRAKASA PRESS

# இந்துசாதனம்

(SUPPLEMENT TO THE HINDU ORGAN.)

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"என் கடன் பணிசெய்து கிடப்பதே"

"சீர்பூத்த கருவிநூ லுணர்ச்சி தேக்கச்
செம்பூத்த சீலமாந் தங்க நோக்கப்
பார்பூத்த புறச்சமய இருளை நீக்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்த நீநூ றாங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானார் தந்த
வார்பூத்த வரிவிச்சை தொழிலென் றோது
மதம்பூத்த விநாயகன்றன் வணக்கம் வாழி"

"வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே."

புத்தகம்—சஎ. } யாழ்ப்பாணம்:— யுவ௵ ஆனிமீ௴ கஎஉ ( 1935 ஜூலை 1 திங்கட்கிழமை. ) { இலக்கம்—உ௬

## நமது பூர்வ ஆலயங்கள்.

பேராசிரியர் K. S. ஸ்ரீகாந்தன் M. A.

புராதன காலத்திலும் இடைக்காலத்திலும் நம் பாரதநாட்டில் பல தேவாலயங்கள் — சிவாலயங்கள், விஷ்ணுவாலயங்கள் குகாலயங்கள் — பொலிந்திருந்தன. அவை கலைகளின் பிறப்பிடமாயும், அக்கலைகளின் வளர்ச்சிக்கான கழகங்களாயும் விளங்கின: இவ்வாலயங்களில் கலைவல்லோர் அக்காலத்திற் காலத்துக்குக் காலம் கூடிக் கலை வளர்ச்சி சம்பந்தமான விஷயங்களைப் பற்றி ஆலோசனை செய்து வருவர். கலைஞானக் களஞ்சியங்களாயிருந்த ஆலயங்கள் இப்போது அடைந்திருக்கும் சீர்கேட்டை என்னென்று எடுத்துரைப்பது. மீன்கடையின் நிலைமையை எய்திவிட்டன என்று கூறினும் பொருந்தும். கலைவல்ல புலவர்கள் வீற்றிருந்த இடத்தில், அந்தணர் வேதமோதிய இடத்தில், இப்போது காப்பிக் கிளப்புக்களும், பழவர்க்கக் கடைகளும், தையற்காரனின் துணி நிலையமுமே காணப் படுகின்றன. ஆன்ம லாபத்திற்கான, புத்தி விருத்திக்கான சம்பாஷணைகள் சம்வாதங்கள் நிகழ்ந்த ஆலயங்களில் இப்போது பிணக்குகளும், சண்டைகளும், சச்சரவுகளும் மலிந்து விட்டன. எனவே ஆன்மலாபம் அடைய விரும்புபவர்கள் இப்போது ஆலய தரிசனத்தால் ஆம் பயன் இல்லையென்று எண்ணுகின்றனர். இது சம்பந்தமாகப் பர்கூஸன் என்னும் அறிஞர் கூறியன ஈண்டுக் குறிப்பிடத் தக்கதாம் "ஸ்ரீரங்கம் ஆலயத்தின் வெளிவீதி ஓர் கடைத்தெருவாய் விட்டது. அங்கு டல்வித போஜனசாலைகள் உண்டு. யாத்திரிகர்களை இப்போஜனசாலைக்காரர் நயமொழிகளால் அணைத்துப் பின் அவர்களது அற்ப பொருளைக் கவர்ந்து விடுகின்றனர். இராமேஸ்வரத்திலும் மதுரையிலும் நடக்கும் அநியாயங்களோ பலப் பல: அவற்றைக்காணும் பிரயாணி எவனும் அருவருப்படையாமலிரான். அந்தோ, மேலான நோக்கத்தைக் கொண்டு ஸ்தாபிதம் செய்யப்பட்டுள்ள இவ்வாலயங்கள் தகுதியற்றவர்கள் கையிற் சிக்கி ஈனநிலைமையை எய்தினவே என்று எவரும் இரக்க வேண்டியநிலைமை ஏற்படுகின்றது." என்பது மிஸ்டர் பர்கூஸனின் கூற்று.

முற்காலத்திலும் இடைக்காலத்திலும ஆலயங்கள் என்ன நிலைமையில் இருந்தன என்பதைப் பற்றி அறிதல் பயனுடைத்தாம். இவ்வாலயங்கள் ஜன சமூகத்தின் மீது எத்தகைய செல்வாக்குப் பெற்றிருந்தன, எத்தகைய மகத்தான சேவைகளைப் புரிந்தன, என்னும் இன்னோரன்னவற்றை, சிலாசாசனங்கள் மூலமாக நன்கு அறியலாகும். மக்களின் சமூகவாழ்க்கையும் சமய வாழ்க்கையும் ஓர் ஆலயத்திலேயே அக்காலங்களில் தழுவி நின்றன. ஆலயங்கள் கட்டுவதில் முன்னுள் வாழ்ந்த மன்னர்கள் அவாவுற்றனர். சேர சோழ பாண்டிய மன்னர்களும் வட இந்தியாவில் உள்ள மன்னர்களும் ஆலயங்கள் ஸ்தாபிப்பதிலும், பழைய ஆலயங்களைப் புநருத்தாரணஞ் செய்வதிலும் ஒருவரோடொருவர் போட்டி இட்டுக்கொண்டு நின்றனர். அவர்கள் ஆலயங்களை அமைத்ததுமன்றி, அவற்றின் பராமரிப்பின் பொருட்டும் பல நிலங்களையும் பொருள்களையும் தருமசாதனஞ் செய்தனர். கோயில்களுக்குரிய காணி பூமிகள் வரி கொடுக்கத் தேவையில்லை. இனி ஆலயப் பராமரிப்பு ஓர் நிர்வாக சபையில் இருக்கும் ஆனால் விசேஷ தருமத்தின் பொருட்டுச் சாதனஞ் செய்யப்பட்ட பொருள்கள் பூசகர்கள் பொறுப்பிலேயே இருக்கும். ஆலயத்தைப் பரிபாலிக்கும் நிர்வாகசபையின் வேலைத்திறமை காலத்துக்குக் காலம் அரசினர் உத்தியோகத்தரால் மேற்பார்வை செய்து மன்னனுக்கு அனுப்பப்படும். உத்தம சோழன், பராந்தகன், இராஜ இராஜன் போன்றவர்கள் ஆலய பரிபாலன விஷயத்தில் மிகவும் சிரத்தை எடுத்தனர் இனி ஆலயங்களின் பரிபாலனத்தைக் கைக் கொண்ட நிர்வாக சபைகளும் தத்தம் கடமையை எல்லோர்க்கும் திருப்தி விளைக்குமாறு புரிந்து வந்தன.

முற்காலத்தில் இருந்த ஆலயங்களின் பொருள்களிற் பெரும்பான்மை யானது சமூகச் சேவைக்கு உபயோகப் படுத்தப்படல் வேண்டும் என்ற நியதி இருந்தது. இது கட்டாய நிபந்தனை இன்றாயினும், கோவில் நிர்வாகிகள் சமூகச் சேவையில் அதிகம் கவலை எடுத்தனர் என்பதை இப்போது எமக்குக் கிடைத்துள்ள சிலாசாசனங்கள் மூலமாக நன்கு அறியலாகும். ஏழைகட்கு அன்னதானம் செய்வது கோவில்களின் பெரியதோர் கடமையாயிருந்தது.

முற்காலக் கோவில்கள் பல்கலைக் கழகங்களாகவும் விளங்கின. இலக்கணம், இலக்கியம், நியாயம், வைத்தியம் என்பனவற்றைப் பற்றிய சம்வாதங்கள் நடேறும் இக் கோவில்களில் அறிஞர்களால் நிகழ்த்தப்படும்; வேதங்கள் இதிகாசங்கள் சாஸ்திரங்கள் என்னும் இன்னோரன்னவற்றைப்பற்றி மக்களுக்குப் பயிற்றுவதற்காகப் பல காணிபூமிகள் பிரத்தியேகமாகத் தரும சாதனம் செய்யப்பட்டன வென்பது சிலாசாசனங்களினுல் இப்போது அறியக் கிடக்கின்றது. திருவொற்றியூர் ஆலயத்துக்கு அத்தகைய ஓர் தருமசாதனம் செய்யப் பட்டிருப்பதாக இப்போது அறிகிறோம். தேவாரம், திருவாசகம், நாலாயிரப் பிரபந்தம் என்பனவற்றை ஓதுவதற்கும் விசேஷ சௌகரியங்கள் செய்யப் பட்டன காஞ்சிக்குச் சமீபமாகவுள்ள திருக்கூடல் வேங்கடேஸ்வரப் பெருமான் கோவிலின் பொறுப்பில் ஓர் வைத்திய சாலையும், கல்லூரியும் இருந்தனவென்று பழைய சாதனங்கள் மூலமாக அறிகின்றோம்.

ஆலயங்களில் ஆச்சாரியர்களுக்கு உக்ந்தமான பதவி அளிக்கப்பட்டிருந்தது. அவர்களுக்குப் பல வேலி நிலங்கள் அரசர்களால் அளிக்கப்பட்டிருந்தது. ஜனசமூகத்திலும் அவர்கட்குள்ள செல்வாக்கு அதிகமாயிருந்தது. ஆலயங்களில் நாயன்மார்களும் ஆழ்வார்களும் திருவாய் மலர்ந்தருளிய தேவாரம், மற்றும் பிரபந்தங்கள் என்பன ஓதுவதற்கு விசேஷ வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆலயங்கள் சங்கீத அபிவிருத்திக்கும் ஏற்ற நிலையங்களாயிருந்தன.

இனி, அக்காலத்தில் இருந்த மடங்களுக்கும் ஆலயங்களுக்குமிடையே மிகுந்த தொடர்பு இருந்தது. இந்த மடங்களின் அதிபதிகளாய் உண்மைச் சந்நியாசிகள் இருந்தனர். ஜனசமூக சேவை செய்வதில் மடங்களும் ஆலயங்களும் போட்டி இட்டுநின்றன.

இராஜராஜனின் காலத்தில் ஓர் ஆலயத்தின் பொறுப்பில் நாடகசாலையொன்றும் நர்த்தன மண்டபமொன்றும் இருந்தனவென்று அறியக் கிடக்கின்றது. நானாவித நாடகசாலைகளை வைத்துப் போஷிப்பதற்காகப் பலவேலி நிலங்கள் தரும சாதனம் செய்யப்பட்டனவென்று மூன்றாவது குலத்துங்க மன்னன் காலச் சிலாசாசனம் ஒன்று கூறுகிறது.

அக்காலத்திருந்த ஆலயங்கள் தற்போதைய வங்கி செய்யும் கடமைகளையும் செய்தன என்று அறிகிறோம். ஓர் கிராமப் பஞ்சாயத்து கிராம மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்காக ஆலயம் ஒன்றிற் கடன்பெற்றதாக ஓர் சிலாசாசனம் கூறுகின்றது பஞ்சம் நேர்ந்த காலங்களில் ஆலயங்கள் செயற்கரும் உதவிகள் செய்தன. ஆலயங்களுக்குரிய ஆபரணங்கள் தாமும் பஞ்ச நிவர்த்திக்காக விற்கப்பட்டனவாம்,

## ஹிந்துக்களும் நீண்டாமையும்.

—:*:—

### நீண்டாமைப் பேயால் மதமாற்றம்.

### பௌத்த குருமாருக்கு வேண்டுகோள்.

உயர்ஜாதியினரால் பரிபாலிக்கப்படும் ஆலயங்களுக்குட் சென்று வணக்கத்துக்கு உரிமை வேண்டுமென விழைந்த தென்னிந்தியத் நீண்டாதார் பலரின் கோரிக்கையை அவ்வுயர் ஜாதி ஹிந்துக்கள் நிராகரித்துவிட்டபடியால், அவர்கள் இப்போது ஹிந்துசமூகத்தை விட்டுப் பிரிவதற்குத் தீர்மானித்திருக்கின்றனர் என்று அறிகிறோம். திருவாங்கூர், மலையாளம், கொச்சி என்னும் இடங்களில் உள்ள நீண்டாதார்த் தலைவர்கள் இலங்கையில் உள்ள பௌத்த குருமாருக்கு ஓர் வேண்டுகோள் விடுத்திருக்கின்றனராம். சில பௌத்த குருமாரைத் தென்னிந்தியாவிற்கு அனுப்பவேண்டும் என்றும் தம்மைப் பௌத்த மதத்திற்சேர்க்க வேண்டுமென்றும் இத் நீண்டாதார்த் தலைவர்கள் கேட்டிருக்கின்றனராம்.

இதுவிஷயமாக அவர்கள் பம்பலப்பிற்றிப் பிரதம பௌத்த குருவை உசாவிய போது, அவர் இப்போது தென்னிந்தியாவுக்கு அனுப்பப் பௌத்த குருமார் தம் வசம் இல்லையென்று கூறிவிட்டராம். இப்போது ஸ்ரீராகுவா என்னும் பௌத்தகுரு சில பௌத்தகுருமாருடன் தென் இந்தியா செல்ல உடன்பட்டிருக்கிறாராம். அங்கே நீண்டாதார் மத்தியில் அவர்களின் பண உதவியைக் கொண்டு ஓர் விகாரை கட்டி நீண்டாதாரைப் பௌத்த மதத்திற் சேர்ப்பராம்.

## திருக்கோணமலை பஸ் விபத்து.

—(o)—

### ஒருத்தி உடன் மரணம்.

### மூவர்க்குக் கடுங்காயம்.

(நமது நிருபர்.)

சென்ற புதன்கிழமை காலை அநுராசபுரத்திற்கும் திருக்கோணமலைக்கு மிடையே யோடிய பஸ் சீப்புக்குளம் என்னுமிடத்திற் கணித்தாகப் போகும்போது தெருவினின்றும், விலகியோடிக் கானில் நின்ற ஒரு மரத்தில் மோதியது. குறித்த பஸ்ஸிலிருந்த பிரயாணிகளுள் 9 பேர் ஊறடைந்தனர். வர்ணகுலசூரிய சிஸிலியென்னும் பெண் அநுராசபுரத்து வைத்தியசாலைக்குக் கொண்டுபோனவுடன் இறந்தாள் பஸ்ஸின் சாரதியும் இன்னுமிருவரும் ஸ்மரணையில்லாமற் கிடக்கின்றனராம். ரையர் வெடித்தமையினுல் பஸ் ஒரு பக்கத்திற்கோடி மரத்தோடு மோதியதெனச் சொல்லப்படுகின்றது.

## அரசர் அமானுல்லா.

ஆப்கானிஸ்தானத்தின் சிம்மாசனத்தைத் துறந்து ஓடிய ஆப்கன் அரசர் அமானுல்லகான் சென்ற இரண்டு மாதகாலமாய்த் துருக்கியின் ராணுவ உத்தியோகஸ்தர் பதவியிலிருந்து வருகிறார். சில நாட்களுக்கு முன் அவருக்குத் "தளபதி"ப் பதவியை துருக்கி இராணுவ இலாகா மந்திர சபை அளித்திருக்கிறது. இவ்விதம் துருக்கியிலிருந்து கொண்டே துருக்கியின் உதவியையும் மற்ற முஸ்லீம் ராஜ்யங்களின் ஒத்துழைப்பையும் கொண்டு திரும்பவும ஆப்கன் சிம்மாசனத்தை அடைய அவர் முயற்சி செய்வாரென்று சொல்லப்படுகிறது.

இவ்விஷயத்தில் இத்தாலிய சர்வாதிகாரி முசோலினியின் ஆதரவும் அமானுல்லாவுக்குக் கிடைக்குமென்று கூறப்படுகிறது.

# "கம்பர் கவித்துவம்."

(மூளாய் சைவப்பிரகாசவித்தியாசாலைச் சிரேஷ்ட வகுப்பு மாணவன் எழுதுவது)

"உவர் கம்பன் பிறந்த தமிழ்நாடு" என்று தமிழகம் என்றும புகழும் வண்ணம் பெயரிடச்செய்தவர் கம்பநாடர் எனும் கவிச்சக்ரவர்த்தியே. "தமிழறிந் தோரைக்காணில் தமிழன்னையைக் கண்டோம்" எனக் களிப்பெய்தும் காவலராலும், செல்வராலும் போற்றப்பெற்ற இக் கம்பர் "தான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையம்" என எண்ணிப்போலும் கவித்துவத்தன்மை வாய்ந்ததும், செந்தமிழின் பம் சொரிவதுமாகிய இராமகாதையை இந் நிலவுலகில் நிலவும்வண்ணம் பாடியுள்ளார். பாரதியார் "செந்தமிழ்நாடென்னும்போதினிலே இன்பத்தேன்வந்துபாயுது காதினிலே" என்று கூறியது, கம்பரின் கவிநயத்தில் ஈடுபட்டென்றே எனக் கருதுதல் மிகையாகாது. இவர் கவியின் கவிநயங்கள் கொள்ளையின்பங்கொடுக்குந் தன்மையன. இது கருதியே "கம்பநாடன் கவிதையிற்போல் கற்றோர்க்கு இருதயங் களியாதே" என அறிஞர் வாக்கு வழங்கிவருகின்றது.

இப்புலவர் பெருமானின் காதையைத் தமிழகத்தார் யாவரும் நன்கறிந்திருப்பர் என்பது என் நம்பிக்கை. "கல்வியிற் பெரியன் கம்பன்" "கம்பன்வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும்" என்ற மூதுரைகளே இவரின் அபூர்வ, அற்புதசத்தியையும், கவித்துவத்தையும் நனி விளக்குகின்றன. ஆராய்ச்சி அறிஞர் மிகுந்து விளங்கும் இக் காலத்திலே அடியேன் "கம்பரின் கவித்துவம்" என்னும் விஷயத்தில் ஈடுபடுவது நகைத்தற்குரியதே. எனினும், மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலைப் பெற்றோர் தினத்தன்று, வடபெரும்பாக வித்தியாதரிசி ஸ்ரீமான் K. S. அருணந்தி M. SC. அவர்களின் தலைமையின்கீழ் ஷெ வித்தியாசாலை மாணவர்களால் நடிக்கப்பெற்ற "கம்பர் கவித்துவம்" என்னும் நடித்தலை உறுதுணையாய்க்கொண்டு இக் கட்டுரையை எழுத விடைபெறுகின்றேன்.

முடியுடை வேந்தராய் விளங்கிய மூவேந்தரும் தமிழன்னையின்பால் வைத்த தலையாய அன்பினால், அருந்தமிழ்த்தாயின் பெருந் தமிழ்ப் புதல்வர்களாய் விளங்கிய புலவர்களைத் தம அவையின்கண்ணே வைத்துக் காப்பாற்றினர். இக்கம்பர் சோழனின் அவைக்களப்புலவனுய் விளங்கினர். இது நிற்க,

பாவலர் சொற்போற்றும் புலவர்கள் பரிசில் வழங்கும் தன்மையைக் கேள்வியுற்ற விறகுவெட்டியின் மனையாள், தன் கணவனையும் ஓர் பாட்டுப் பாடிப் பரிசு பெற்று வரும்படி ஏவிவிட்டனள். படிக்கும்பொழுது, ஏட்டைப் பிரித்து வைத்துவிட்டு ஓட்டைப் பார்த்துக்கொண்டிருந்த விறகுவெட்டி, பாட்டுப்பாடிப் பரிசுபெறப் புறப்பட்டது ஓர் விந்தையே. எனினும் அவன் தான் வீதியில் காண்பன, கேட்பன யாவையும் தொகுத்துப் பாட்டாகப் பாட எண்ணி, முதன்முதல் சிறுவர் மண்பாவை வைத்து விளையாடுதலைக்கண்டு, முதல் அடியாக "மண்ணுண்ணி மாப்பிள்ளையே" என்றெடுத்தனன். பின்பு காகம் கா! கா! எனக் கரைவதைக் கேட்டுக் 'காவிறையே' என்றும், குயில் கூவுவதைக் கேட்டுக் 'கூவிறையே' என்றும், கோயிற் பெருச்சாளி ஒன்றோட 'உங்களப்பன் கோவிற்பெருச்சாளி' என்றும் தொடுத்தனன். தன்னெதிரே தோன்றிய நண்பனிடம் தன் பாட்டைப் பாடியதும், அவன் கொல்லென நகைத்து, "எடே! இதென்ன! கன்னு, பின்னு, மன்னு, தென்னு என்று பிதற்றுகின்றனையே" என்றதும் அவன் அதையுஞ் சேர்த்துக்கொண்டு தன்னில் லேகி இயற்றிய செய்யுளை இல்லாளிடங் காட்டினன். தன் கணவனியற்றிய கவியில் அரசன் பெயரில்லையே என்று "சோழாங்கப்பெருமான்" எனவும், அவன் அதையும் தொடுத்துப் பின் முழுப்பாட்டையும் புது ஏட்டில் வரைந்தான். புது ஏட்டுப் பாட்டை மிகவுங் குதூகலத்துடன்கொண்டு அரசன்மனைக் கேகினன். அங்கு அப் பொன்மேரு அதுவோ இதுவோ என அதிசயிக்குமாறு அரசன் தன் சிங்காசனத்தில் வீற்றிருந்ததையும் அவன் முன்பு மொய்த்திலங்கிய தாரகைகள்போலக் கவிராயர்களையும், முழுமதிபோலக் கம்பனையுங் கண்டான். 'தானும் பாட்டுப்பாடிவிட்டேன்' என்ற இறுமாப்பால் அவர்களைச் சிந்தித்தும் கவனியாது, அரசவண்டையிற் சென்று "அரசரேறே! யான் ஓர் பாப் படிவத்துளன். இதற்குத் திருச்செவி சாய்த்தருளல்வேண்டும்" என வேண்டி,

"மண்ணுண்ணி மாப்பிள்ளையே
காவிறையே கூவிறையே
உங்களப்பன் கோவிற்பெருச்சாளி
கன்னு, பின்னு, மன்னு, தென்னு
சோழாங்கப் பெருமானே"

எனக் குரலெடுத்துக் குழறினன். கம்பனை ஒழிந்த ஏனையோர் குலுங்கக்குலுங்க நகைத்தனர். கம்பரோ ஏழை எளியவரிடம் உள்ளன்புபூத்து இரக்கங்காட்டுமின்னருளாளர். அணைந்தோரைக் காக்கும் அன்புடையர். விறகு வெட்டியின் பொருளின்மையையும் அறிவின்மையையும் நன்கறிந்துகொண்டார். அவரது மனம் அனலிடைப்பட்ட மெழுகென உருகி உள்ளன்பு பூத்தது. கவிராயர்களின் நகைப்பு இவருக்குச் சினத்தை மூட்டிவிட்டது. தருக்குக் கொள்ளாத, ஏனையோரைத் துரும்பென மதித்துப் புலவர் பெருமான், "ஏ! புலவர்களே! உங்களின் நகைப்பிற்குக் காரணமென்னை? இவனின் பார்வை அருவருப்பை அளித்தால், இவன் கவியும் அங்ஙனமா? சேற்றில் தாமரை வளரவில்லையோ? கற்ற மூழ்மூடர்களாகக் கணிக்கின்றீர்களே; எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப் பொருள்காண்பது அறிவல்லவா" என்று உரைத்தலும், புலவர்கள் மீண்டும் விலாப் புடைக்க நகைத்து, "நீரே பொருள் கூறும்" என்றனர். தான் இக்கவிக்குப் பொருள் சொல்லும பெற்றியைப் பெறவேண்டுமென்ற அவாவுடன் நின்ற கம்பன் அவர்களை நோக்கிப் பின்வருமாறு பொருள் கூறினர்.

"இப்பாட்டு, இடையிடையே சி குறைவதால் இசை இணைக்குறள் ஆசிரியப்பா எனலாம். இதன்பொருள்: மண்-பூமியை, உண்ணி - உடையவனே, கா - கற்பகச் சோலைக்கு இறையே - அரசனே, உங்கள் அப்பன்-உமக்குத் தந்தை, கோ - அரசன், வில் - விற்போரிலே, பெருச் - பெரிதாகிய, ஆளி - சிங்கத்தை ஒப்பாய், கன்னு-கொடையிலே கன்னனைப் போல்வானே, பின்னு-பொறைக்கு அவருக்குப் பின்பிறந்த தருமபுத்திரனை நேர்வாய், மன்னு - என்றும் நிலைபெறுபவனே, தென்னு - தமிழன்னையை வளர்ப்பதில் பாண்டியனை ஒத்தவனே, சோழாங்கம் - சோழநாடாகிய அங்கத்தையுடைய, பெருமானே - பெருமையுடையவனே.

இதன்கண் "திருவுடைமன்னர் திருமாலின் அமிசம் பெற்றவராதலால் "மண்ணுண்ணி" என வியந்தோதியும், அழகுக்கு "மன்மதன்" என்றும் சொல்வதற்கு "லக்ஷ்மீபுத்திரன்" என்றும் இயற்கையாய் வழங்கி வருவதால் மாப்பிள்ளையே என்றும், போகத்தில் இந்திரனை நிகர்த்த தன்மையால் "காவிறையே"யென்றும் "திருவுடைமன்னரைக்காணில் திருமாலைக்கண்டேனே" என்பதால் நீவிர் இறைவனெனக் கணித்து கூவிறையே யென்றும், அரசுரிமை பரம்பரையாய்வருவதை விளக்க "உங்களப்பன் கோ" என்றும் விற்போரில் புறங்காட்டாது வீரங்காட்டும் விறலுடையோனெனவும் வில் முனையில் சிங்கேறுபோல்வாய் எனவும், நிலைகாட்ட "விற்பெருச்சாளி" என்றும், கொடையில் கன்னனுக்கும் பொறையில் தருமருக்கும் ஒப்பவனேயாதலால் கன்னு, பின்னு, மன்னு என்றும், தமிழன்னையிலும் தமிழன்னையின் தலைக்கவிகளிலும் தன்னளிகாட்டித் தளர்விலாது நிலைநாட்டுபவனான தன்மையால், தமிழன்னையை வளர்க்கும் பாண்டியனை ஒப்பாய் என்பதை எடுத்தாளத் 'தென்னு' என்றும், சோணாட்டை அங்கமாய்க் கொண்டிலங்கும் காரணம்பற்றிச் 'சோழாங்கப் பெருமானே' என்றும், அழைத்துள்ளார். இம்மட்டோ மேலும் இவர் 'மண்' என்னும் மங்கலமொழியுடன் தொடங்கியது ஓர் மங்கல மங்களத்தை யிட்டே என்று கூறல் தகும். இச் செய்யுளில் கவிநயமும், அணியும், தொனியும் கொண்டிருக்குந்தன்மை பாராட்டத்தக்கது' என விரிவுரையுங் கூறினர். இவ்வற்புதக் கவியின் கவிவன்மையைக் கண்ட யாவரும் கருடனைக்கண்ட பாம்பென வாய்பொத்தி வாளாவிருந்தனர். என்னே! கவியின் கவிவன்மை அற்புத சக்திவாய்ந்த அருட் கவியன்றோ. இதுவே அருட்கவியின் பெற்றி,

## 350 ரூபாவைக் காணவில்லை.

—):×:(—

சாவகச்சேரிப் பிறக்ரரின் கதி.

புகைரதப் பிரயாணத்திற் களவு

சாவகச்சேரியில் பிரபல பிறக்ராயுள்ள ஸ்ரீமான் வல்லிபுரம் கனகரத்தினம் J. P., U. P. M., சென்ற செவ்வாய்க்கிழமை யிரவு கொழும்புக்குப் புகைரதமார்க்க பாகப் பிரயாணம் செய்கையில் அவரது சட்டைச் சாக்கிற்குள் இருந்த 350 ரூபாவையும் காணவில்லையாம்.

தாளாவைப் புகைரத ஸ்தானத்துக்குப் புகைரதம் வந்ததும், ஷெ பிறக்ரர் தண்ணீர் கொண்டுவரும்படி, தம்முடன் நின்ற புகைரதப்பகுதி பணியாளனைப் பணித்தாராம். தண்ணீர் பருகிவிட்டு அவர் படுக்கையின்மீது சாய்ந்தார். சிறிது நேரம் செல்ல அவர் சட்டைச்சாக்கிற்குள் இருந்த 350 ரூபாவையும் காணவில்லை. கல்கமுவாப் புகைரதஸ்தானத்துக்குப் புகைரதம் வந்துநின்றதும் ஸ்ரீகனகரத்தினம் தம் பணம் காணுதுவிட்டமையைப்பற்றி அதிகாரிகளுக்கு அறிவித்தார். புகைரதப் பணியாளரை உடனே விசாரித்தபோது அவர்கள் தமக்கு ஒன்றுந் தெரியாது என்றனர். இதன்பின் அநுராதபுரப் புகைரத ஸ்தானத்திற்கும் கொழும்புப் புகைரத ஸ்தானத்திற்கும் அறிவித்தல் கொடுக்கப்பட்டது. புகைரதம் கொழும்புக் கோட்டைப் புகைரத ஸ்தானத்துக்கு வந்ததும் புகைரதஸ்தான அதிகாரிகளும் பொலிசாரும் ஷெ புகைரத "கார்டை"யும் ஏனைய பணியாளரையும் விசாரணை புரிந்தனர். ஆனால் பணமோ, அதனைக் களவாடியவரோ இன்னும் அகப்படவில்லை

## திருக்கோணமலையில் பரதவர் கலகம்.

பட்டாளம் கூப்பிடப்பட்டது.

திருக்கோணமலையைச் சேர்ந்த கந்தார என்னுங்கரையில் வசிக்கும் பரதவர் சிலர் திருக்கோணமலைக்குடாவுக்குள் அநுமதியின்றிச் சென்று மீன் பிடித்தார்களென்ற குற்றச்சாட்டில், தனித் தனி 5 ரூபா அபராதம் கொடுக்க மறுத்தமையினால் துறைமுக அதிகாரிகள் அப்பரதவர் மீன்பிடித்துப் பிழைப்பதற்குக் கருவியாகிய குல்லாக்களைப்பிடித்து நடுக்கட்ட முயன்று அங்குள்ள உதவிபெட்டு அக்குல்லாக்களைப் பிடிக்கப் போயினர். அப்படிப் போனபோது 25 பேருக்கு மேற்பட்டபரதவர் ஒருங்கு திரண்டு அவர்களை எதிர்க்க அவர்கள் பின் வாங்கி, அடுத்த நாள் பொலிஸ் துணையுடன் சென்றனர். அவர் வரவையைக் கண்ட பரதவர் பொலிசாரைத் தாக்கி வன்னிமைக்குத் கலையில் அடித்து 3 பொலிசர்க்கும் ஊறுவிளைத்தனர். உடனே அங்குள்ள பட்டாள என்ஜினியர் மாரைச் சேர்ந்த சிலர் துப்பாக்கி முதலிய ஆயுதங்களுடன் பொலிசருக்கும் வன்னிமைக்கும் துணையாகச் சென்று பரதவரைப் பின்னிடச் செய்து குல்லாக்களை அகப்படுத்தினர். பரதவருள் ஒருபடலர் சிறைபடாக்கப்பட்டனர்.

## கொழும்புக் கைத்தொழிற் கல்லூரி.

அநேக மாணுக்கருக்கு இடமில்லை.

சன்சர் விடுதலையின் பின் சென்ற வாரம் கொழும்புக் கைத்தொழிற் கல்லூரி ஆரம்பமானபோது, பழையமாணவரும் புதிய மாணவருமாக 1011பேர் அக்கல்லூரியில் பலதுறைத்தொழில்களைப் பயில விரும்பி வந்து சேர்ந்தனர். ஆனால் கல்லூரி அதிகாரிகள் இடமில்லாமையால் 970 மாணவரை ஏற்றுக்கொண்டு ஏனையோரைக் கொஞ்சக்காலம் பொறுத்துக்கொள்ளும்படி தெரிவித்தனராம். இக்கல்லூரி அதிகாரிகள் மாணுக்கருக்குப் பலவகையான தொழிற்கல்வியைப் பயிற்றுவதோடு அமையாது பானை சட்டி கோப்பை சிமெந்து முதலிய பொருள்களை ஆக்குவதற்கான மணல் களிமண் ஆகியன உற்ற இடங்களையும் பரிசோதித்து வருகின்றனராம். கொழும்புக்கு அணித்தாகவுள்ள நுகக்கொடையில் கோப்பை கற்பாத்திரங்கள் செய்தற்கான களிமண் காணப்படுகின்றதாம். சிங்களமாணவர் இப்படிப்பட்ட கைத்தொழிற் கல்வியில் ஆர்வம் பாராட்ட நமது தமிழ் மாணவர் இன்னமும் உத்தியோகத்திற்கே ஆசைப்பட்டு அலைகின்றனர் இது என்ன அறியாமை!

## விகடக் கொத்து

—:§:—

"விதூஷகன்" வரைவது.

கணபதி:— ஏன் அப்பா தோசை சூடாயில்லை?

ஓட்டல்காரன்:— நேற்று வந்திருந்தால் சூடாகவே இருந்திருக்கும்.

x x x

உபாத்தியாயர்:—உனது கணக்குப் பிழை, 10 சதம் குறைகிறது சாயந்தரம் பாடசாலை முடிய சரியாக்கி காட்டு.

பையன்:—இல்லை, சேர், நான் பந்தாடப் போகவேணும் குறைகிற காசு 10 சதத்தை இதோ தருகிறேன் விடுங்கள்.

x x x

எஜமான்:— ஏண்டா நாற்காலியில் 5, 6 நாள் தூசி இருக்கே துடைக்கிறதில்லையா?

வேலைக்காரன்:— இதில் 5, 6 நாளாய் இருக்கவில்லை ஆகையால் தான் தூசி அப்படியே இருக்கு.

x x x

ஜட்ஜ்:— நீ ஏன் வைக்கீலை வைத்துக் கேசை நடத்தக்கூடாதா?

வழக்காளி:— இம்முறை பொய் சொல்வதாக இருக்கவில்லை.

x x x

அண்ணன்:— தம்பி அம்மாவைக் கூப்பிடு.

தம்பி:— அண்ணே சிகரட் குடித்ததும் கூப்பிடுகிறேன்.

x x x

கமலம்:—என்னடி திலகம் உனது குழந்தை பேசுமா!

திலகம்:— இல்லை. பேசாமல் இருக்கக் கற்றுக்கொடுத்திருக்கிறேன்.

x x x

சிறுவன்:—அப்பாவா எஜமான்?

உபாத்தியாயர்:— எல்லோர்க்கும் தலைவனே எஜமான். (சிறுவன்) அப்படியாயின் எனது அம்மாவா.

x x x

பரதன்:—அப்பா விளையாடப்போகட்டுமா?

தகப்பன்:— வேண்டாம் எங்கள் தகப்பனார் எங்களை விளையாட விடுகிறதே இல்லை

பரதன்:— உங்கள் தகப்பன் ஓர் முட்டாளாக்கும்.

தகப்பன்:—இல்லையடா உனது தகப்பனார் தான் முட்டாள்.

x x x

ஜனகி:— உனது புருஷன் குடித்தவன் என்று எப்படி அறிந்தாய்?

கமலம்:—ஏன் அவர் முத்தமிட விரும்பினாரே.

x x x

நீதிபதி:— நீ திருடன் என்று உனது முகம் கண்ணாடிபோல் காட்டுகிறது.

கைதி:— என் முகம் கண்ணாடி என்றால் தங்கள் முகத்தைக் காணுகிறீர்போல்.

x x x

வேலையாள்:—அம்மா! ஐயா மூட்டையும் கையுமாக அறிவற்று விழுந்துகிடக்கிறார்.

மனைவி:— அப்படியா; சேலைவாங்கிவரச் சொன்னேன். வாங்கிவந்திருக்கலாம் எங்கே பார்க்கலாம்.

x x x

தகப்பன்:— சீட்டாடும்போது மகனைப் பார்த்து ராஜாக்களுக்குள்ளே பெரியவர் யார்.

மகன்:— ஜாக் (Jack) தான் பெரியவன்.

x x x

இரத்தினம்:—உன்னுடன் பந்து விளையாடுவதிலும் ஓர் கழுதையுடன் விளையாடலாமே

பாலு:— உண்மைதான். இனம் இனத்தைச் சாருமல்லவா.

x x x

உபாத்தி:—காப்பி கொண்டுவந்தாயா

முத்து:— இல்லை. நான் காப்பியை வீட்டிலேயே குடித்துவிட்டேன் சார்.

x x x

சிறுவன்: ஏனப்பா குடத்தை இடுப்பில் வைத்துக்கொண்டீர்கள்.

பெரியவர்:— உங்கம்மா நாளைக்கு பிரசவமுடிந்து குழந்தையுடன் வருவாள் அப்போது குழந்தையைக் கொண்டு திரியவேணும் அதுதான் பழகிக்கொள்கிறேன்.

# வைரமுத்து வீடு வியபிசார விடுதியா?

## வறுமைப்பிணியால் வந்த வனிதையின் கதி 4 வருஷம் வேலைபார்த்த மேரியின் சாட்சியம்.

## "உண்மையேசொல்லவேண்டும் ஆனால்........." நீதிஸ்தலத்தில் விசாரணை விபரம்.

[நமது நிருபர்.]

யாழ்ப்பாணம் ஆரிய குளத்தடியில் வசிக்கும் த. வைரமுத்து வியபிசார விடுதி வைத்து நடத்தினர் என்று குற்றஞ் சாட்டப்பட்ட வழக்கு சென்ற வியாழக்கிழமை மீண்டும் யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிஸ்தலத்தில் விசாரணை செய்யப்பட்டது. முதலாவதாக மேரி என்னும் சாட்சி விசாரணை செய்யப்பட்டாள்: அவள் கூறியதன் சாரம் வருமாறு:—

எனது வயது 27, நான் மூன்று வயது உள்ளவளாயிருக்கையிலேயே மலய் நாட்டில் இருந்து இங்கு வந்தேன். இங்கு வந்த நாள் தொடக்கம் நான் தங்கும் இடமும் அலைந்து கொண்டே திரிந்தேன். ஒருமுறை நான் சங்கானையில் துரை என்பவரது வீட்டில் சமையற்காரியாய் இருந்தேன் இதன் பின் சிலர் என்னை ஏமாற்றி ஏழாலைக்கு அழைத்துச் சென்றனர். இதன் பின்னும் யான பல வீடுகளில் இருந்தேன்.

"வைரமுத்துவுக்கு யாரோ என்னைக் கொண்டு வந்தனர். யார் என்னைக் கொண்டுவந்த தென்பது எனக்குத் தெரியாது. வைரமுத்து வீட்டில் நின்றகாலத்தில் அடிக்கடி திருப்தியீனம் கொண்டு வேறிடங்களுக்குப் போயிருக்கிறேன் ஆனால் வைரமுத்து விடாது என்னை ஆட்களை அனுப்பி அழைத்துக் கொண்டு வருவார்.

### எதிர்பக்க நியாயவாதியின் குறுக்கு விசாரணை.

4 வருடகாலமாக எதிரி வைரமுத்து வீட்டில் மிகவும் துன்பப் பட்டிருக்கிறேன் என நீ சொல்லியிருக்கிறாய்; இப்படிக் கூறும்படி உனக்குச் சொல்லித் தந்தது யார்?

—ஒருவருமில்லை.

நீ இருக்கும் வீட்டில் தான் எதிரியும் வசிப்பவர்?

—ஓம்.

வைரமுத்து வீட்டில் உன் வேலையென்ன? விடுவாசல் பெருக்குவது, ஆடுமாடுகளைப் பார்த்தல் என்பனவே.

வைரமுத்து விடுகாலியாய்த் திரியும் ஆடுமாடு பிடிப்பதற்கு லைசென்ஸ் பெற்றவன்?— ஓம்.

இங்கேபார்: இந்த நாலு வருட காலமும் வைரமுத்துவின் வீட்டில் மிகவும் துன்புற்று இருக்கிறேன் என்றாய். அப்படியானால் மீண்டும் மீண்டும் அவ் வீட்டிற்கு ஏன் வந்தாய். வைரமுத்துவும் அவனது ஆட்களும் உன்னை நல்லாய்ப் பார்த்தபடியால் திரும்பித் திரும்பி அங்கே வந்தாய்?— அதற்காக நான் வரவில்லை.

சில நேரங்களில் உனக்கு அவர்கள் நல்ல சாப்பாடு தந்து போஷித்தார்கள்? — ஓம்

நீ ஏன் இந்த வீட்டைவிட்டு ஓடிப்போகவில்லை?— பயத்தினால் அப்படிச் செய்யவில்லை.

ஓடிப்போனநீ, பயத்தினால்தானா திரும்பி வந்தாய்?— ஆட்கள் வந்து திரும்பிக் கூட்டிக் கொண்டு வந்தனர்.

நீயாகவே திரும்பித் திரும்பி வைரமுத்து வீட்டிற்கு வரவில்லை?— ஆட்கள் வந்து வாவென் றழைக்க என்ன செய்கிறது என்று வந்தேன்.

உனக்கு வைரமுத்து சம்பளம் எவ்வளவு தந்தான்?— ஒன்றுமில்லை.

இங்கேபார், பொலிசார்தான் உனக்கு இப்படியெல்லாம் சொல்லும்படி கட்டளை இட்டிருக்கின்றனர்; இல்லையா?— உண்மை சொல்ல வேண்டும் அல்லாவிட்டால் மயிர் அரிந்து போடுவோம் என்று பொலிசார் சொன்னவர்கள் தான்.

இது சம்பவம் நடக்க 3, 4 நாட்களுக்கு முன் நாராயணபிள்ளை வந்தவரோ?— ஓம்.

### மேலும் சாட்சி கூறியன.

"தற்சமயத்தில் நான் எதிரியினது வீட்டிலேயே இருக்கிறேன். கடந்த 4 வருட காலமாக அங்குதானே இருக்கிறேன். எதிரி என்னைத் துர்ச்செயலில் ஈடுபடுத்தி பணம் வாங்குவது வழக்கம். ஆனால் எனக்கு ஒரு சதமேனும் தருவதில்லை. சாப்பாடு மட்டும் போடுவார். நான் பெண்வியாதியால் பீடிக்கப்பட்டிருக்கிறேன். நான் அவர் எண்ணத்துக்கு இசையமாட்டேன் எனச் சொன்னால் எதிரி என்னை அடிப்பார். கடந்த கிழமையும் ஓர் சிங்களப் பெண் கொண்டுவரப் பட்டாள்.

சென்ற கிழமையும் வைரமுத்து வீட்டில ஓர் சிங்களப் பெண் கொண்டு வரப் பட்டாள். அவள் அங்கே 3 நாட்கள் வரை இருந்துவிட்டுப் பின் போய் விட்டாள். வெள்ளாந்தெரு முருகேசு என்பவரால் நல்லம்மா வைரமுத்து வீட்டிற்குக் கொண்டு வரப்பட்டாள். மத்தியானம் 12 மணிவரையில் நான் அறைக்குட் செல்கையில் அங்கு நல்லம்மாவும் எதிரியும் இருப்பக் கண்டேன், பின்னர் நான் அவளைத் தனியே காண நேர்ந்தபோது "நான் இங்கு படாத பாடு படுகின்றேன் நீயுமா கஷ்டப்பட வந்து விட்டாய்?" என்று கூறினேன். வைரமுத்து வீட்டிற்கு அநேக சாதி மனிதர்கள் வந்து போவது வழக்கம்"

இதன்பின் நல்லம்மா என்னும் பெண் பின்வருமாறு சாட்சியம் பகர்ந்தாள். அவள் கூறியதன் சாரம் வருமாறு:—

"நான் புங்குடுதீவு வேலாயுதம் என்பவரின் கைம்பெண். எனக்கு வயிற்றுக்கு வழியில்லாமல் எங்காவது வேலை செய்ய வேண்டுமென்று இருக்கையில் சோமு என்பவர் யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வந்தார். நான் இங்கே ஞாயிற்றுக்கிழமையன்று வந்தேன். திங்கட்கிழமை காலை 9 மணிக்கு வெள்ளாந்தெரு முருகேசு வைரமுத்துவின் வீட்டிற்கு அழைத்துச் சென்று எனது அனுமதியின்றியே 5 ரூபா வாங்கினார். அங்கே மேரியைக் கண்டேன். அப்போது அவள் மிகக் கஷ்டப் படுவதாகக் கூறினாள். அங்கே நாலு ஐந்து பேர் என்னைத் தொந்தரவு செய்தனர்.

"எனக்கு இரண்டு பிள்ளைகள் உண்டு.

சாட்சியைக் குறுக்கு விசாரணைசெய்த போது கூறியவற்றின் சாரம் வருமாறு:

"எனதுவயது 25 ஏறக்குறைய 3 வருட காலங்களின்முன் எனது கணவன் இறந்து விட்டார். எனக்கு இரண்டுபிள்ளைகள் இருக்கிறார்கள். சோமன் என்பவனுடன் கூடியே இவ்விடம் வந்தேன். சனிக்கிழமையன்று வெளிப்பட்டு நல்லூருக்கு வந்து எனது பெரிய தகப்பனாரின் வீட்டில் சோமு என்பவனுடன் ஒரு நாள் முழுமையும் தங்கியிருந்துவிட்டு வேலை தேடப் புறப்பட்டேன. சோமு என்பவன் வெள்ளாந்தெரு முருகேசு வீட்டிற்கு அழைத்துச் சென்று முருகேசு வேலை தேடிக் கொடுப்பார் எனச் சொல்லி என்னை அங்கே விட்டுவிட்டுச் சென்றுவிட்டார். சோமு எனக்குத் தம்பி முறை பூண்டவர். ஓட்டு மடத்தடியில் எனது சகோதரி தங்கம்மா என்பவர் சடங்கு செய்திருப்பது உண்மையேயாயினும் அவள் புருஷனுடன் கோபித்துக் கொண்டு புங்குடுதீவில் ஏறக்குறைய 4 மாதங்களாக வசித்து வருகிறாள். நான் சடங்கு முடித்ததின்மேல் இவ்விடம் வந்தது இதுவே முதல் தடவையாகும். நான் சென்ற இரவு பெரிய கடையிலுள்ள நாகலிங்கம் என்பவருடைய சாப்பாட்டுக் கடையிற் சாப்பிட்டு விட்டுப் படுத்திருந்தேன். ஞாயிற்றுக்கிழமையன்று முழு நாளும் நல்லூரிலேயே இருந்தேன். சோமன் என்பவன் ஏறக்குறைய 28 வயது உடைய வாலிபன். வேலணையில் வியாகஞ் செய்தவன். முருகேசு என்பவர் வைரமுத்துவின் வீட்டில் என்னைக்கொண்டு போய் விட்டதும் ரூபா 5 பெற்றுக் கொண்டு போய் விட்டார். அப்போது 8 மணி வரையிருக்கும். முருகேசு என்னை ஒரு றிக்ஷோவிலேற்றியும் தான் நடந்துமே வந்தார். பின்னர் 9 மணியளவிலும் முருகேசு திரும்பவும் வைரமுத்துவின் வீட்டிற்கு வந்தார். அப்போது நான் விறாந்தையில் நின்றேன். வந்ததும் அவர் வைரமுத்துவைக் கூப்பிட்டார் வைரமுத்து அங்கு வந்து உன்னை அடிப்பேன் குத்துவேன்; என்னிடம் துவக்கும் கத்தியும் இருக்கிறது; எடுத்துக் காட்டவா? என என்னைப் பயமுறுத்தினார். அதன்மேல் என்னையும் முருகேசுவையும் கொட்டிலினுள் பிடித்துத் தள்ளினார். அத்தருணத்தில் என்னுடனிருந்த எனது பெண்குழந்தை அழ ஆரம்பித்தது. அதனால் மனமாற்றமடைந்த முருகேசு திரும்பவும் எதிரியால் தூண்டப் பட்டார். பயமிகுதியினாலேயே இவர் சொன்னபடி நடந்துகொண்டேன்,

இன்னும் இரு சாட்சிகளை விசாரணை செய்தபின் நீதிபதி வழக்கு விசாரணையை 2–7–35 குத் தவணையிட்டார். மேரி என்பவள் வியபிசாரஞ் செய்ததாக சார்ஜன்ற் அப்சா ஓர் வழக்குத் தொடர்ந்தார். அதில் அவள் தான் குற்றவாளியே என ஒத்துக் கொண்டாள். இதன்பின் நீதிபதி அவளைக் கொழும்பில் இதற்கெனப் பிரத்தியேகமாயுள்ள அரசினர் சுகவிடுதிச் சாலைக்கு அனுப்பும்படி உத்தரவிட்டார்

# கொக்குவிலில் வாள்வெட்டு.

—(o—

## எதிரிகளுக்கு விருந்து.

கொக்குவிலைச் சேர்ந்த (1) முத்துவேலு ஞானசேகரம் (2) வைத்தியலிங்கம் இரத்தினம், (3) மணியம் கணபதி என்பவர்களுக்கெதிராக யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிஸ்தலத்தில் பொலிஸ் சார்ஜன்ற் செல்லையாவினால் வழக்குத்தொடரப்பட்டிருக்கிறது 1-ம் எதிரி சென்ற 22-6-35 இல் நாகன் எல்லுப்போலை என்பவனை வாளால் வெட்டி, அவனுக்குப் படுகாயம் விளைத்தார் என்பது, மற்ற இரு எதிரிகளும் மேற்சொல்லிய செயலுக்கு உதவி புரிந்தனர் என்பதுமே முறைப்பாடு.

விசாரணையின்போது நாகமுத்தன் என்பவன் பின்வருமாறு சாட்சியம் கொடுத்தான்:—

சென்ற 22ந் திகதி யன்று நான் சங்கானையிலிருந்து வந்தேன். என்னுடன் காயப்பட்டவனாகிய எல்லுப்போலையனுங் கூட வந்தான் நாங்கள் கிறிஸ்தவாலயத்துக்கு அணித்தாக வரும்போது தெருவில் அனேகசனங்கள்நிற்பதைக்கண்டேன் அவர்களுள் தம்பாபிள்ளையும் எதிரியும்நின்றார்கள். பின்பு 2ம் எதிரி காயப்பட்டவனிடம் எங்கிருந்து வருகிறாய் எனக் கேட்டான். அதற்குக் காயம்பட்டவன் தான் காசு வாங்கப் போய்வருகிறேன் எனச் சொல்ல, பின்னரும் அவர் நீ ஒரு சண்டியனோ எனக் கேட்டவண்ணம் கையால் அடித்தார். பின்னர் ஞானசேகரமும் தாக்கினார் அப்பால் 2ம் எதிரி வேலியிலிருந்த ஓர் வாளை எடுத்து 1ம் எதிரியிடம் கொடுத்தார். 3ம் எதிரி 1ம் எதிரியிடம் வெட்டும்படி சொல்லிவிட்டு ஒரு பைசிக்கிளிற் போய்விட்டார். அதன்பின்பு 1ம் எதிரி காயப்பட்டவனை வெட்டினார். ஒரு வெட்டுத் தோள்மூட்டிலும் ஒருவெட்டுத் தலையிலும் விழுந்தது. காயப்பட்டவன் கும்பிட்டான். எதிரி ஓடிவிட்டார். பின்பு சந்தியிலேயே காயப்பட்டவன் விழுந்துவிட்டான். பின்னர் நான் சென்று பொலிஸ் விதானையிடம் முறையிட்டதன் பேரில் அவர் இடத்திற்கு வந்து விசாரணை செய்தார். எனது வாக்குமூலத்தையும் பதிவுசெய்துகொண்டார்.

இத்துடன் நீதிபதி எதிரிகள் யாவர்க்கும் விருந்து விடுத்து வழக்கை வருகிற 5ந் தேதிக்குத் தவணையிட்டார்.

# அறணை கடித்து மரணமா?

## இருசிறுவருக்கு நேர்ந்த கதி.

—(*)—

## சாவகச்சேரிச் சம்பவம்.

(நமது நிருபர்)

சென்ற 26ம் தேதியிரவு சாவகச்சேரியில் ஓர்பரிதாபகரமான சம்பவம் நிகழ்ந்தது. சங்கத்தானைத் தமிழ்ப்பாடசாலைத் தலைமையாசிரியர் ஸ்ரீ கதிர்காமு அவர்களின் ஏக புத்திரனான 10 வயதுச்சிறுவனும், நெல் வியாபாரம் செய்யும் ஸ்ரீ முத்தையா என்பவரின் 8 வயதுள்ள சிறுவனும் ஒரே படுக்கையில் இறந்துகிடப்பக் காணப்பட்டனர்.

26ம் தேதியிரவு இரு சிறுவரும் படித்துக்கொண்டிருந்த பின்னர் நித்திரைக்குச் சென்றார்களாம். விடியற்காலை அவர்களது பிணங்கள் அறைக்குட் காணப்பட்டன. அறணைக்கடிக்காயங்கள் தேகத்திற் காணப் பட்டிருக்கின்றன.

# ஏமாற்றிய சீட்டுக்கம்பனி மானேஜர்.

வடஇலங்கை ஆகாயஏலச்சீட்டுக் கம்பனி மானேஜரான ஆ. சிதம்பரப்பிள்ளை என்பவர், யாழ்ப்பாணம் பெரியகடையில் கிருஷ்ணானந்தபவன் காப்பி ஹோட்டல் ஆ. தில்லைவனம்பிள்ளை என்பவர்க்கு 221 ரூபா பெறுமதியான ஓர் செக்கைக் கொடுத்து ஏமாற்றினார் என்ற வழக்கில் விருந்தின் மீது எதிரி சென்ற திங்கட்கிழமை நீதிஸ்தலத்தில் கொண்டுவரப்பட்டார். நீதிபதி எதிரியை 500 ரூபாப்பிணையில் விடுதலை செய்து வழக்கு விசாரணையை இன்றைக்கெனத் தவணையிட்டார்.

தேவை.

3 வயதுக் குழந்தையைப் பார்க்கக் கூடிய ஓர் வேலைக்காரி (தமிழ்ப்பெண்ணாயிருந்தால் நலம்) தேவை. விபரங்களுக்குப் பின்வருவோரிடம் அறிந்துகொள்ளலாம்:-

Mrs. K. Alvapillai
P. M's. Bungalow
Jaffna.

(Mis 90 1-4-7-35)

# "வாயை மூடு."

## பழைய பரிசோதகர்க்கு நீதிபதியின் கண்டனம்.

## முந்திய வழக்கின் வெற்றி அதனால் இறுமாப்பா?

(நமது நிருபர்.)

தெல்லிப்பழை வீமன்காமத்தைச் சேர்ந்த பறையகுலத்துச் சினியன் என்பவனை அடித்தார் என்றும் அவனது துவிச்சக்கரத்தைப் பறித்தார் என்றும் மாவிட்டபுரம் வாசியும் மிருகசிஷ்டா நிவர்த்தனசங்கத்துப் பழைய பரிசோதகருமான ஆ. செல்லையா என்பவர் மீது குற்றம் சாட்டப்பட்ட வழக்குச் சென்ற சனிக்கிழமை யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிஸ்தலத்தில், நீதிபதி மிஸ்டர் சைமன் ரெட்றிக்கோ முன்னால் விசாரணைக் கெடுத்துக்கொள்ளப்பட்டது இவ் வழக்கிற் சமாதானமாகப் போகும்படி நீதிபதி ஆரம்பத்திலேயே கேட்டுக்கொண்டார். ஆனால் எதிரி அதற்கிணங்காது, தாமே வழக்கை நடாத்தினார். எதிரி வழக்காளியைக் குறுக்குவிசாரணை செய்யும் போது அனாவசியமான பல கேள்விகளைக் கேட்டார் என்று எண்ணப்பட்டதால் நீதிபதி அவரை நோக்கி "வாயைமூடு" என்று கண்டிக்கவும் நேர்ந்தது.

விசாரணை முடிவில் நீதிபதி எதிரியைக் குற்றவாளியெனக்கண்டு அவர்க்கு 15 ரூபா அபராதம் விதித்தார். அபராதம் விதித்தபின், நீதிபதி எதிரியை நோக்கிப் பின்வரும் கருத்துப்படக் கூறினார்:—

"நீர் முன் ஓர் வழக்கில் எதிரியாகி அதில் நீரே வழக்கை நடாத்தி நிரபராதியெனக் கண்டு விடுதலை செய்யப்பட்டீர். அந்த எண்ணத்தினாலேயே, இவ்வழக்கிலும் சமாதானமாகப் போகாது, உமது கெட்டித்தனத்தைக் காண்பிக்க வந்தீர்போலும்,

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம்: புவஞு
ஆனிமீ களவ திங்கட்கிழமை.


## யாழ்ப்பாண - மலையாளப் புகையிலை வியாபார ஐக்கியசங்கம்.

சென்ற சனிக்கிழமை (29-6-35) பின்னேரம் யாழ்ப்பாணம் முற்றவெளியில் யாழ்ப்பாண - மலையாளப் புகையிலை வியாபாரத்தையும் யாழ்ப்பாணத்திற் புகையிலைச் செய்கையையும் விருத்தி பண்ணுதற்காக வேண்டிய வழிவகைகளை யோசிக்கும் பொருட்டு ஸ்ரீமான். வை. துரைசுவாமியவர்களின் தலைமையில் ஒரு மகாநாடு கூட்டப்பட்டது. அதன் விபரங்களை இற்றைப்பிரசுரத்திற் பிறிதோரிடத்து வெளியிட்டுள்ளோம்.

நமது யாழ்ப்பாணநாட்டின் பிரதான வருவாய்களாயிருந்தவை மலாய்நாட்டில் உத்தியோகம், இலங்கைத் தேயிலை றப்பர் தென்னந் தோட்டங்களில் உத்தியோகம், அரசாங்கசேவை, புகையிலைச்செய்கை, யாழ்ப்பாண - மலையாளப் புகையிலை வியாபாரம் சுருட்டுத்தொழில் என்னுமிவைகளேயாம். சென்ற மூன்று வருடந் தொடக்கமாகப் பணப்பஞ்சம் தலைப்பட்டமையினுல் மேலே சொல்லப்பட்ட மலாய்நாட்டு உத்தியோகம் தேயிலை றப்பர் தென்னந்தோட்டத்துள்ள உத்தியோகம் வியாபார சமுதாயங்களிலுள்ள உத்தியோகமெல்லாம் குன்றிவிட வேற்றூர்களிற் சென்று பிழைத்த நம் யாழ்ப்பாணமக்கள் பெரிதும் கஷ்டமுறலாயினர். இந்நேரமே யாழ்ப்பாண-மலையாளப் புகையிலை வியாபாரத்திலும் வேற்று நாட்டுப் புகையிலை வியாபாரத்தினுல் எதிரிடையுண்டாக, புகையிலை வியாபாரமும் புகையிலைச்செய்கையும் குன்றத் தலைப்பட்டன. சிங்களநாட்டில் அதிக மானத்தோடு செலவாகிவந்த யாழ்ப்பாணச் சுருட்டு வியாபாரமும் குன்றலாயிற்று. இப்பொழுது யாழ்ப்பாணத்திலே பல்லாயிரக் கணக்கானோர் உத்தியோகம் பார்த்தும் புகையிலை வியாபாரம் தோட்டம் முதலியன வகைகளைச் செய்தும் பிழைத்தற்கு வகையின்றி நிலை தளர்வாராயினர். சிங்களநாட்டிற்கு றப்பர் தேயிலை தேங்காயென்னும் பொருள்கள் எவ்வளவு பிரதான வருவாய்களாயுள்ளனவோ, யாழ்ப்பாணத்திற்குப் புகையிலை அவ்வளவு பிரதான வருவாயாகவுள்ளதென்பது எவருமறிந்த விஷயம். இப்படியான புகையிலைச் செய்கை புகையிலை சுருட்டு வியாபார மென்னுமிவைகளுக்கு வீழ்ச்சி நேர்ந்தபோது, யாழ்ப்பாணமக்கள் இவ்வீழ்ச்சியை நீக்குதற்கு முயற்சி செய்யாமல் இருக்கவே முடியாது.

வருடமொன்றுக்கு இங்கே செய்கை பண்ணப்படும் புகையிலை 12000 கண்டி வரையிலிருக்கும். இப் பெருந்தொகையுள் 5735 கண்டி புகையிலை மாத்திரம் மலையாளத்திற்கு வருடம் ஒருமுறைஅனுப்புதற்கு அநுமதியுண்டு. இதனுல் புகையிலைசெய்வோருட் பலர் அத்தொழிலைக் கூடாதெனக் கண்டு கைவிடலாயினர். சிங்களநாட்டிலே சுருட்டுக்கும் மானமில்லாதொழிய சுருட்டு வியாபாரமும் குறைபத் தொடங்கிவிட்டது. இனி குறித்த கண்டி புகையிலையைத் தானும் செய்து மலையாளத்திற்கு அனுப்பலாகுமோ என்றால், யாழ்ப்பாணத்துள்ள தோட்டக்காரர் தம் நிலத்தை எருவிட்டுப் பண்படுத்த, வேறும் வேண்டிய செலவுகளைச் செலவிட, முதலில்லாத நித்திய தரித்திரர்களாயிருக்கிறார்கள். முன்னர் இவர்கள் செட்டிகடைகளில் முதற்பணம் வாங்கி நிலத்தை எருவிட்டுப் பண்படுத்திப் புகையிலையைச் செய்து அப்புகையிலையைச் செட்டிகடையிலே ஒப்புவிக்க, செட்டிப்பிள்ளைகள் தாம் கொடுத்த கடன் முதல் வட்டி எல்லாங் கணக்குப் பார்த்துத் தம் மனம்போனவாறே புகையிலை விற்ற பணத்திற் கழித்துக்கொண்டு எஞ்சிய சொற்பபணத்தைத் தோட்டக்காரனிடங் கொடுக்க, அவன் அதனைவாங்கிச் சிலநாட்களுக்கு மாத்திரம் குடும்பபாரத்தை செய்துவிட்டுப் பழையபடி நித்திய தரித்திரனுகவே காணப்படுதல் வழக்கமாகும். இனி உடன் பணங்கொடுத்துப் புகையிலை வாங்குவோர் தம் தரகர் மூலமாகப் புகையிலையை இயன்றவரையிற் குறைந்த விலைக்கே வாங்கிக்கொள்ளுவார்கள். இந்த நியாயங்களினுற்றுன் யாழ்ப்பாணத்துள்ள புகையிலைத் தோட்டக்காரன் ஒருபோதும் ஈடேறுவதில்லையென்று சொல்லலாம்.

இப்படியான கஷ்டங்களையும் இடையூறுகளையும் ஒழித்தற்பொருட்டே விவேகிகள் சிலருடைய விடாமுயற்சியின் பயனுக யாழ்ப்பாண மலையாளப் புகையிலை வியாபாரச் சங்கம் ஏற்படலாயிற்று இச்சங்கம் அரசினருடைய ஆதரவையும் பெற்றுள்ளது. புகையிலை செய்வோர் இனிமேற் செட்டிப்பிள்ளைகளிடம் முற்பணத்தைக் கடனுகப் பெற்று அநியாயவட்டி கொடுத்துத் தமக்கு எவ்வகையான இலாபமுமில்லாமற் கஷ்டப்படவேண்டியதில்லை. இச்சங்கத்திற்கு அரசினர் 3½ லட்சம் ரூபா கடனுக உதவுவர். தமது புகையிலையைக் கொண்டுபோய்ச் சங்கப்பொறுப்பில் கொடுப்பவனுக்கு இச்சங்கம் நூற்றுக்கு 60 விகிதமான பெறுமதிப் பணத்தை உடனே கொடுக்கும். அதாவது 100 ரூபா பெறுமதியுள்ள புகையிலையைக் கொடுத்துவிட்டு 60 ரூபாவைச் சங்கத்திலிருந்து உடனே பெற்றுக்கொள்ளலாம். எஞ்சிய 40 ரூபாவும் புகையிலை விற்றபின்னர் கொடுக்கப்படும். அப்படிக் கொடுக்கும்போது சங்கத்திற்கும் ஒரு அற்ப விகிதம் கழித்துவிடுதல்வேண்டும். இச்சங்கத்தைப் பலப்படுத்தி இதுவாயிலாகப் புகையிலைச் செய்கை வியாபார மென்னுமிவைகளை நடாத்தினுல் யாழ்ப்பாணப்புகையிலையின் மானமும்யாழ்ப்பாண - மலையாளப் புகையிலை வியாபாரமும் உன்னத நிலையை அடையுமென்பது திண்ணம்,

ஆனுல் இச்சங்கத்தின் முயற்சியினுல், தங்களுக்குப் பெருநஷ்டம் ஏற்படுமென அச்சங்கொண்டு செட்டிப்பிள்ளைகளும் அபிமானமில்லாதவராகிய சில தரகர்மார் புகையிலை வியாபாரிமாரும் இச்சங்கத்திற்கு இடையூற்றை உண்டாக்கும்படி யாழ்ப்பாணத்திலும் மலையாளத்திலும் முயற்சி செய்து வருகின்றார்களாம். புகையிலை செய்வோர் நயவஞ்சர்களாகிய இவர்கள் பேச்சில் அகப்பட்டுச் சங்கத்தைக் கைவிடவொண்ணுது. புகையிலைச்செய்கை வியாபாரம் என்னும் விஷயங்களில் இச்சங்கமே யாழ்ப்பாணத்தவரை ஈடேற்றிவைக்கத் தக்கதென்பது காலகதியில் அறியத்தக்கதாகும். இச்சங்கத்தின் முயற்சிகளையும் பயன்களையும் காலந்தோறும் இப்பத்திரவாயிலாக வெளியிடுவோம்.

## குற்றங்கள் அதிகரிக்கின்றன.

*அம்மம்ம! நம் வடமாகாணத்தில் உள்ள பொலிசார் தொகை எவ்வளவு! ஆனுல் இவ்வளவு தொகையான பொலிசாரும் அவர்களிடம் வேலைவாங்கவேண்டிய உத்தியோகத்தர்களும் தங்கள் கடமையைச் செவ்வனே புரிகின்றுரா என்பது ஓர் ஆசங்கை. இவர்கள் தங்களது கடமையைச் செவ்வனே புரிந்தால், இந்த யாழ்ப்பாணத்தில் — முன் குற்றங்கள் அற்ற நாடாயிருந்த இந் நன்னுட்டில்— குற்றங்கள் அதிகரிக்குமா என்று கேட்கிறோம்! பொலிசாரின் தொகை எவ்வளவுக்கெவ்வளவு இங்கு அதிகரித்து வருகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு குற்றங்களும் அதிகரித்துக்கொண்டே வருகின்றன என்று கூறினும் பொருந்தும். பொலிசார், இங்கு குற்றங்களைத் தடுப்பதில் உண்மையிற் கவலைகொண்டவர்களானுல், தாம் முதலில் குற்றம் செய்யாதவர்களாக வாழ்க்கையை நடாத்துதல் வேண்டும். அப்படியான வாழ்க்கையை நம் பொலிஸ் உத்தியோகத்தர் நடாத்துகின்றனரா என்று கேட்கின்றேம். அன்று ஓர் வழக்கில் தமது சகாவான இன்னுேர் பரிசோதகர்க்காதரவாகச் சாட்சியம் பகரவந்த ஓர் உபபரிசோதகரை எதிர்பக்க நியாயவாதி ஸ்ரீ S. நடேசன் அவர்கள் கேட்ட கேள்விகளை அப்பரிசோதகர்க்கும் பொலிஸ் பகுதியினர்க்கும், அரசினர்க்கும் சமர்ப்பிக்க விரும்புகின்றேம். கேவலம் வேசியர்மனை சென்றீரா? இன்ன பொதுமகளை வைப்பாக வைத்திருக்கின்றீரா? கள்ளுக்குடித்தீரா என்னும் இன்னுேரன்ன கேள்விகளை ஷெ. நியாயவாதி கடாவியதில் இருந்து இப்பொலிஸ் பரிசோதகரைப்பற்றி ஊரவர்கள் என்ன நினைப்பார்கள் என்று அவரையே கேட்கிறேம். நியாயவாதி கேட்டன உண்மையேயானுல், இவ்வுப பரிசோதகர் இன்னும் பொலிஸ்பகுதியிற் கடமை பார்க்கலாமா? ஷெ. நியாயவாதியின் கேள்விகளின் பின்னர் ஊரவர்கள் இவ்வினம் உபபரிசோதகர்மீது அருவருப்பும், வெறுப்பும், அச்சமின்மையும் கொள்ளமாட்டார்களா? ஊரவர்களின் நன்மதிப்பைப் பெறுத ஒருவர் உத்தியோகம்—எப்பகுதியிலாயினும் — பார்க்கத் தகுதியுடையவரா? இவரின் நடத்தையைப் பற்றி ஷெ வழக்கின் பின் அதிகாரிகள் ஏதும் விசாரணைபுரிந்தார்களா? நியாயவாதி அன்று கேட்ட கேள்விகளுக்கு இல்லை இல்லை என்று பதிலிறுத்த பரிசோதகரே, தமது தூய வாழ்க்கையின் தன்மையைத் துலாம்பரமாகக் காட்டுதற்காக, இப்படியான ஓர் விசாரணையை வரவேற்பார் என்று நாம் துணிந்து கூறுகிறேம்.*

*ஈற்றில் நாம் பொலிஸ்பகுதியினர்க்குத் தெருட்டவேண்டியதொன்றுண்டு. பொலிசார், ஊரவர்களின் பணத்தைக்கொண்டு வயிற்றைக்கழுவும் பொதுஜன ஊழியரேயாவர் அன்றி எஜமானர்கள் அல்லர்: லஞ்சம் பெறுதல், பொய் வழக்குத் தொடருதல், ஈற்றில் அவமானப்படுதல், தீயவாழ்க்கை நடாத்துதல் என்பன பொதுஜன அமைதியைக் காப்பாற்ற வேண்டிய பொலிசார்க்கு அடாது. சத்தியமே ஜெயம் என்பதை அகத்திட்கொண்டு ஊரவர்கள் கௌரவிக்க, அரசினர் மெச்ச, உலகோர் மதிக்கத் தம் கடமையைப் புரியவேண்டும். இப்படி நம் பொலிசார் செய்வதில் தடை யென்ன உண்டு?*

# கண்ணோட்டம்.

### "அட்டைகடித்தாற் குட்டை அறணைகடித்தால் மரணம்."

*என்று நம் நாட்டில் பாட்டிமார் பழமொழி ஒன்றுண்டு. இப் பழமொழி, சென்ற புதன்கிழமை யிரவு சாவகச்சேரியைச் சேர்ந்த கல்வயல் என்னுமிடத்தில் நிகழ்ந்த இரு மரணங்களினுல் உண்மையாகிவிட்டதெனச் சொல்லப்படுகின்றது. ஆனுல் இந்த யாழ்ப்பாணத்தில் அட்டை கடித்ததால் குட்டைநோய் கண்டவர்களையும் அறணை கடித்தமையினுல் மரணமெய்தியவர்களையும் பற்றி நாம் கேள்விப்படவில்லையாதலினுல் குறித்த இரு சிறுவரும் எவ்வாறு இறந்தனர் என்னும் இதுபோன்ற விவரங்களை மரணவிசாரணை உத்தியோகத்தர் வைத்தியர் மூலமாகப் பரிசோதனை செய்து கண்டனரா? பிரேதபரிசோதனை நிகழ்த்தினரா, நிகழ்த்தியிருந்தால் ஷெ இருசிறுவரும் அறணைக்கடியினுல் அல்லது பிறுண்டி நக்கப்பட்டதனுல்தான் மரணம் எய்தினர் என்பதை உர்ஜிதப்படுத்தினுரா என்று நாம் கேட்டல் பிழையல்ல என்பதே எமது அபிப்பிராயம்.*

### மிஸ்ரர் மொலமூரே!

*அந்தோ! என்னே மனிதவாழ்வின் தன்மை! இலங்கை அரசாங்கசபைத் தலைவர், இலங்கையின் ஒப்புயர்வற்ற முடிசூடா மன்னர், பிரபல நியாயவாதி, பிரக்கியாதி படைத்த அரசியல்வாதியாயிருந்த மிஸ்ரர். A. F. மொலமூரே இப்போது சிறைக்களம் புகுந்திருப்பார் என்று நம்புகிறேம். இரத்தினபுரி நீதிஸ்தலத்தை அவமதித்துக் கட்டளையை மீறி ஓர் தொகைப் பணத்தைச் சட்டவிரோதமாக வங்கியில் இருந்து எடுத்தார் என்பதே அவர்மீதுள்ள குற்றச்சாட்டு இக்குற்றச்சாட்டின் பேரில் அவர் விசாரணை செய்யப்பட்டு டிஸ்திறிக் நீதிபதியால் 1 வருடச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டனர். பிறிவிக்கவுன்ஸில் எனப்படும் உயர்தர நீதிமன்றத்துக்கு அவர் அநுப்பிய மநுவும் நிராகரிக்கப்பட்டுவிட்டது. எனவே அவா வேறு வழியின்றிச் சிறைக்களம் புகவேண்டி ஏற்பட்டது. எவன்-பிறன்மனையைத் தாயெனநோக்காது பெண் எனக் கொள்கின்றனே, எவன் அரசியல்வாழ்க்கையில் பொதுஜன சேவையில் ஈடுபட்டிருக்கும்போது ஒழுக்கம் தவறி நடக்கின்றனே, எவன் தன் பதவி பட்டங்களைத் தன் சொந்த நலங்களுக்காக உபயோகிக்க முனைகின்றனே, அவனுக்கு ஈற்றில் அவலமே எய்தும் என்பது மிஸ்ரர் மொலமூரேயின் வாழ்க்கை நாடகத்தால் நன்கு அறியலாகும்.*

### இன்னும் தூக்கமா?

*சென்ற 27-6-35 இல் வெளிவந்த நமது இந்துசாதனப்பிரசுரத்தில் இந்துக்களே இன்னும் தூக்கமா? என்னும் தலையங்கத்தின் கீழ் "ஹிந்து வாலிபன்" எழுதிய கட்டுரையை அபிமானிகள்படித்து அதில்உள்ளனவற்றைக் கிரகித்திருப்பார்கள் என்பதே எமது நம்பிக்கை 'ஹிந்துவாலிபனின்" கூற்றுக்கள் தற்போதைய நிலைமையில் அபிப்பிராயபேதம் கிளப்பக்கூடியனவாயிருக்கும் எனினும் அவர் கூறியனவற்றில் அதிகம் உண்மையிருக்கின்றதென்பதை எவரும் மறுக்கமுடியாது. ஹிந்துக்களாயுள்ளவர்கள் பிறமதங்களில் அவாக் கொண்டு சேரவில்லை. பொருளாதார நெருக்கடி சமூகத் தொல்லை என்பனவற்றுலேயே நம்மவரிற் சிலர் பிறமதங்களை நாடுகின்றனர் என்னும் கருத்துப்பட "ஹிந்துவாலிபன்" கூறியனவற்றை அப்படியே நமது அபிமானிகளுக்குச் சமர்ப்பிக்கிறேம். இது விஷயத்தில் தென்னிந்தியாவிலுள்ள சில திண்டாதார்கள், உயர்ஜாதி ஹிந்துக்கள் தமக்கு ஆலயப்பிரவேச உரிமையளிக்க மறுத்துவிட்டதால், தாம் பௌத்தமதத்திற் சேரத் தீர்மானித்துவிட்டனரென்னும் சமாசாரத்தையும் அபிமானிகள் ஊன்றிப் படிக்கவேண்டியது; இப்படியே நம் சமூகமானது நாடோறும் தனது அங்கத்தவர்களை இழந்துகொண்டே வருமானுல், ஈற்றில் அதன் கதி என்னுகும் என்று பழைய பழக்க வழக்கங்களும் மூடச் சம்பிரதாயங்களுமே சமயம் எனக்கட்டிக் கொண்டு அழும் பழையவர்களைக் கேட்கிறேம்*

# ஓர்பெரிய ஆச்சரியம்.

## கண்ணில்லாமற் பார்க்கும் இந்திய வாலிபர். லண்டன்நகரிற் பெருங்கிளர்ச்சி.

காஸ் மீரத்தை சன்ம பூமியாகக்கோண்ட குடபாக்ஸ் என்னும் 29 வயசுப் பராயமுடையஇந்தியவாலிபர் லண்டன்பட்டினத்திற்செய்யும் அற்புதசெயலை மெச்சாதாரில்லையாம் லண்டனிலிள்ள திறமையுள்ள 'டக்ரர்மார்; சிலர் இவ்வாலிபருடைய கண்களைத்தடித்த துணிகளினுல் இறுகக் கட்டி எவ்வாற்றுனும் கண்பார்வை அணுவளவேனும் தெரியாதபடி செய்துவிட்டு முன் அறியாத சில புத்தகங்களை அவ்வாலிபரிடங்கொடுக்க உடனே அவற்றை எவ்வகையான பிழையுமின்றி வாசித்தாராம். பின்னர் லத்தீன்பாஷையிலுள்ள சில வசனங்களை ஒரு கரும்பலகையில் எழுதிவிட அப்பாஷை அவ்வாலிபருக்குத் தெரியாதிருப்பவும் எழுதப்பட்ட அவைகளை கண்கள் மூடிக்கட்டப்பட்டபின் அப்படியே ஒரு காகிதத்தில் எழுதிக்கொடுத்தாராம் இருட்டில் அப்படிச்செய்ய முடியாதென்றும் பலகை முதலிய திடபொருள்களால் தம் கட்பார்வையை மறைத்தாலும் அவ்வகைசெய்யமுடியுமென்றும் அவ்வாலிபர்சொல்லுகிறுராம். கண்களைக்கட்டிவிட்டபின் ஒருமோட்டரதத்தைச் செலுத்தவும் இலக்குத்தவறுமல் துப்பாக்கிகொண்டு சுடவும் தம்மால் முடியுமென்றும் அவர் தெரிவிக்கின்றுர். இவற்றையெல்லாம் கண்டு லண்டன் நகரவாசிகள் பேராச்சரியமடைகின்றுர்களாம்,

இந்திய அரசியற் குறிப்புக்கள்

# தங்கம்போவதைத் தடுக்கமுயற்சி.

## பச்சோந்திமிதவாதிகளது ஒத்துழைப்பு.

வெட்கம் அற்ற பதவி வேட்டுவர். | சிறையாளர் விடுதலை நிச்சயமாகுமா?

## சுதந்திரவீரரின் விடுதலை.

(ஸ்ரீதரன் எழுதுவது)

இன்னும் சில தினங்களில் இந்தியச் சட்டசபைக் கூட்டம் மீண்டும் ஆரம்பமாகும் என்று அறியக் கிடக்கின்றது. சென்ற முறைகளில் இந்திய அரசினர் பன்முறை தோற்கடிக்கப் பட்டனர். இம்முறை அவர்கள் தோல்விகளுக்குத் தப்புவரோ என்பது சந்தேகமே. இந்தியாவில் இருக்கும் தங்கம் வெளியேறுவதைத் தடுக்கும் ஓர் மசோதாவைத் தாம் எடுத்தாளப்போவதாக காங்கிரஸ் வாதியான ஸ்ரீமான் அநந்த சயனம் ஐயங்கார் ஓர் அறிவித்தல் கொடுத்திருந்தார். அத்தகைய மசோதாவை எடுத்தாள வொண்ணாது என இராசப் பிரதிநிதி தடுத்துவிட்டார். இராஜப் பிரதிநிதியின் செயல் இந்திய விஷயமாக மிகவும் பாதகமானதென்பதே அரசியல் வாதிகள் பலரதும் அபிப்பிராயமாயிருக்கிறது. தங்கம் வெள்ளி என்பன நாட்டை விட்டு வெளியேறுதல் ஈற்றிற் பாரத நாட்டிற்குச் சொல்லொணா நட்டம் விளைப்பதாகும் என்று பல சட்டசபை அங்கத்தவர்கள் கருதுகின்றனர். அடுத்த கூட்டத்தில் இப் பிரச்சினையைப் பற்றிய விவாதம் எழும் என்று நாம் காத்திருக்கலாம். பிரான்ஸ் அமெரிக்கா முதலாம் நாடுகள் தங்கம் வெள்ளி என்பனவற்றை வாங்குவதிற் கண்ணுங் கருத்துமாயிருக்கின்றன, ஆனால் அடிமை இந்தியாவோ, தனது செல்வமாகிய பவுணையும் வெள்ளியையும் அரசினரது மேற்பார்வையில் வெளிநாடுகளுக்கு அனுப்புகின்றது.

X X X

இந்திய மிதவாதிகளைப்பற்றி யாம் எல்லோரும் நன்கு அறிவோம். இவர்களது அரசியற்கொள்கைகள் பச்சோந்திபோல் அடிக்கடி மாறுதலடைவனவாகும். இவர்களில் அரசியல் ஞானம், அறிவு ஆகியன படைத்த அநேகர் உளர். ஆனால் இவர்கள் திடசித்தம் உடையவரல்லர். இந்திய அரசினரையும் பிரிட்டிஷாரையும் இரந்து பணிந்தே ஏதும் சலாக்கியங்களைப் பெறுதல் வேண்டுமென்னும் கொள்கையுடையவராவர். புகைரதஸ்தானங்களில் இவர்களது மூட்டை முடிச்சுகளைத் தூக்கிக்கொண்டு பின் செல்லும் கூலியாட்களைவிட இவர்களைப் பின்பற்றுபவர் பாரத நாட்டில் எவரும் இல்லையெனலாம். காங்கிரஸ் சட்ட மறுப்பைக் கைக்கொண்டிருந்த காலத்தில் இம் மிதவாதிகளுக்கு சுக்கிர திசை யெனலாம். ஆனால் இப்போது நிலைமை மாறிவிட்டது. காங்கிரஸ் சட்டவரம்புக்கு உட்பட்டதல்ல என்று பிதற்றித் திரிந்த மிதவாதிகள் இப்போது அதே காங்கிரசுடன் ஒத்துழைக்க முன் வருகின்றார்கள்! என்னே இவர்களது பச்சோந்தித் தன்மை!

X X X

பண்டித ஹிருதயநாத குன்ஸுரு என்பவர் ஐக்கியமாகாணத்தைச் சேர்ந்தவர். இவர் இந்திய மிதவாதிகள் சங்கத் தலைவர்; ஆனால் சென்ற சட்டசபைத் தேர்தலில் ஓர் காங்கிரஸ் வாதியால் முறியடிக்கப்பட்டவர். சென்றவாரம் அவருக்கு அளிக்கப்பட்ட விருந்து ஒன்றில் பண்டிதர் குன்ஸுரு மிதவாதிகள் காங்கிரசுடன் கொண்டுள்ள தொடர்பு சம்பந்தமாகப் பின்வருமாறு கூறினர்:— "எமக்கு அளிக்கப்படும் அரசியல் மிகவும் பிற்போக்கானது; எமக்கு ஆபத்து விளைக்கக் கூடியதாகும். எனவே நாம் எல்லோரும் ஒன்று சேரவேண்டும். மிதவாதிகள் ஒற்றுமையை வளர்க்கத் தம்மாலான முயற்சிகளைச் செய்வர். ஆனால் எமது ஒத்துழைப்பைக் காங்கிரசே முதல் நாட வேண்டும்."

X X X

இந்தியாவுக்கு அளிக்கப்படவிருக்கும் அரசியல் நாசமாய்த்தான் இருக்கும் என்பதனை எற்கெனவே அறிந்து உண்மைத் தேசியவாதிகள் வட்டமேசை மகாநாடுகளைப் பகிஷ்கரித்த காலத்தில், இந்த மிதவாதிகள் வயிறு குலுங்குமாறு லண்டனுக்கோடி, லண்டன்சாமிக்குப் பிரார்த்தனை செய்தார்களே! இவர்கள் அளித்த ஒத்துழைப்பின் பயனால்தானே இந்திய அரசினர் அடக்குமுறைகளைச் சர்பூரணமாகக் கைக்கொண்டனர். இப்போது இவ் வெட்கம் கெட்ட மிதவாதிகள் கூறுவனவற்றை என் சொல்வது!

X X X

இந்திய அரசியற் சிறையாளரை விடுதலை செய்யவேண்டும், அசனுல் புதிய அரசியல் மசோதாவுக்கு ஆதரவு தேடவேண்டும் என்ற அவா சேர் சாமுயல் ஹோரிடம் இருந்தது. ஆனால் சேர்ச்சில் கோஷ்டியினர்க்கும், இந்தியாவில் உள்ள சில உத்தியோகத்தர்க்கும் அஞ்சியே அவர் அவ்வாறு செய்யவில்லை. இப்போது சிறையாளரை விடுதலை செய்யும் பிரச்சினை மீண்டும் கிளப்பப்பட்டிருக்கிறது என அமிர்த பஸார் பத்திரிகையின் லண்டன் நிருபர் தெரிவிக்கின்றார். ஸெற்லாந்துப் பிரபு நெஞ்சுத் துணிவுடன் அரசியற் சிறையாளர்களை விடுதலை செய்வாரா? இப்போது அவர் அஞ்சவேண்டியது எதுவுமில்லை.

### மானிப்பாயிற் கத்திவெட்டு.

சென்ற சனிக்கிழமை பின்னேரம் $5\frac{1}{2}$ மணியளவில், மானிப்பாயைச் சேர்ந்த கேலங்காமத்துக் கருகாமையில் உள்ள தோட்டம் ஒன்றில் சுப்பர் வேலுப்பிள்ளை என்பவர் சின்னத்தம்பி கந்தையா என்பவரை முழங்காலுக்கு மேல் வெட்டினார் என்றும் காயப்பட்டவர் உடனே யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்பட்டார் என்றும், வெட்டியவர் எனச் சொல்லப்படும் வேலுப்பிள்ளைக் கெதிராக விருந்து விடப்பட்டிருக்கிறது என்றும் தெரிகிறது.

### பீராவாவியில் நர முதலை.

கொழும்பிலுள்ள பீராவாவியில் சிலநாட்களாக ஒரு முதலை சஞ்சரித்ததால், சனங்கள் நீராடுதற்குகஞ்சி அவ்வாவிக்குச் செல்லாதொழிந்தனர். பின்னர் ஒரு தினம் அந்த முதலை வந்து மிதந்ததும் பொலிசார் அதன் மீது துப்பாக்கிப் பிரயோகஞ் செய்தபோது, குண்டு அதன் உடம்பிற்பட்டுத் தெறித்துவிட முதலையும் நீருள் மூழ்கி மறைந்தது. இப்படியிருக்க, சென்ற வியாழக்கிழமை அந்த வாவியில் ஏதோ குதித்தாற்போன்ற பெருஞ் சத்தமுண்டாகவே, அச்சத்தத்தைக்கேட்ட பலர் வாவிக்கரைக்கு ஓடிவருதலும் ஒரு கரிய பெரிய பொருள் வாவியினுடைய நீருள் மறைந்தும் இடையிடையே வெளிப்பட்டும் நீந்திச்செல்வதையும் சனங்கள் கண்டு சத்தமிட்டார்கள்; சிலர் அது முதலைதானென்ற நம்பிக்கையினால் அதனைத் தப்பாது சுட்டுக்கொல்லும்படி பொலிசாரைக் கூப்பிட்டார்கள். இதற்கிடையில் ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் "அவனைப் பிடியுங்கள்! பிடியுங்கள்!!" என்று சத்தமிட்டுக்கொண்டு அங்கே ஓடிவரக் காணப்பட்டார். இதறகிடையில் முதலையென்று எவரும் எண்ணி நின்ற அக்கரிய உருவம் அக்கரையை அடைந்து மிக வேகமாக ஓடக் காணப்பட்டது. வாவிக்கரையிற் கூடிநின்றவர்கள் 'காரியம் என்ன' என்று பொலிஸ்உத்தியோகத்தரைக்கேட்டபோது, பல நாட்களாக ஒளித்துத் திரிந்த ஒரு குற்றவாளியைத் தாம் கண்டு அகப்படுத்தும்படி துரத்தவர அவன் வேகமாக ஓடிவந்து இவ்வாவியிற் குதித்து நீந்தி அக்கரையை அடைந்து எழுந்து ஓடிப்போகின்றான்" என்று மிக்க கவலையோடு விடையிறுத்தார். பொலிஸ் பரிசோதகர் சொன்ன மறுமொழியைக் கேட்டவர்கள், அவர் பொருட்டு அநுதாபப்பட்டுக் குற்றவாளியின் திறமையை மெச்சினர்களாம்.

உலக அரசியற் நோக்கு

# பிரிட்டிஷாரின் குட்டிக்கரணம்!

## இற்றலியும் அபிசீனியச் சீர்திருத்தமும்

ஜப்பானின்வெற்றி! திருப்தியடையுமா? | இத்தலியின்யுத்தமோகம். லட்சியத்தை அடையுமா?

## 92,000,000 பவுண்கள் பரிநாசம்.

(அரசியல்வாதி எழுதுகின்றார்)

ஆங்கிலோ — ஜெர்மன் கடற்படைச் சாசம் பாராளுமன்றத்து இரு சபைகளிலும் சென்ற புதன்கிழமை விவாதிக்கப்பட்டது. சடந்த சில மாதங்களுக்கிடையில் பிரிட்டிஷ் அரசியல் வாதிகள் அந்நிய நாட்டுப் பிரச்சினை சம்பந்தமாகத் தமது கொள்கைகளை அடிக்கடி மாற்றிக் குட்டிக் கரணம் போட்டு வருகின்றனர். இந்த உடன்படிக்கை பிரான்ஸ் இற்றலி என்னும் இரு நாடுகளுக்கும் மிகுந்த மனக் கொதிப்பை உண்டாக்கும். இவ்வுடன்படிக்கையினால் ஜெர்மனிக்கே அதிக சலாக்கியம் உண்டாகும். ஜெர்மனியின் கடற்படை இனி அதிகரித்தவுடன்பிரான்ஸ் இற்றலி என்னும் இருநாடுகளும் தத்தம் கடற்படைப் பலத்தை அதிகரிக்க முயற்சி செய்யும். அப்படியானல் ஆயுதப் பரிகரணம் என்பது முடியுங் காரியமா என்று லோயிட் பிரபு பிரபுக்கள் சபையில் இவ்வுடன்படிக்கையைக் கண்டித்துப் பேசினார். லோயிட்பிரபு கூறியவாறு பிரிட்டிஷாரின் கொள்கை அடிக்கடி மாறி வருகின்றது தமக்கு ஏற்றவாறு அவர்களின் கொள்கை மாற்றம் அடைகின்றது; இது அவர்களின் சுபாவம்.

ஃ ஃ ஃ

சர்வதேச சங்கம் விஷயமான மந்திரி மிஸ்ரர் ஈடன் இத்தலிய சர்வாதிகாரி முசோலினியுடன் சென்ற புதன்கிழமை சம்பாஷணைசெய்து லண்டனுக்கு மீண்டுவிட்டார். அபிசீனியா விஷயமாக இற்றலியின் கொள்கை பின்வருமாறு என்று முசோலினி ஈடனுக்கு விளக்கியிருக்கிறார் எனத் தெரிகிறது:—

1. இத்தலிக்குரிய நாடுகளில் அபிசீனிய அரசினர் பிரவேசித்துத் தொல்லைவிளைக்க வொண்ணாது.
2. அபிசீனியாவில் இற்றலியின் அதிகாரிகள் சென்று புகைரதப் பாதைகள் திறப்பதற்கும் கல்லூரிகள் ஸ்தாபிப்பதற்கும் உரிமை வேண்டும்.
3. அபிசீனியாவில் சீர் திருத்தத்தைப் பரப்புவதற்காக இத்தலிக்குச் சுதந்திரம் வேண்டும்.

ஃ ஃ ஃ

இக் கொள்கையின் நோக்கமென்ன என்பதை வாசகர்களே யூகித்தது அறியக் கடவர்: முதல் நிபந்தனை நியாயமானதே என்பதை எவரும் ஒத்துக் கொள்வர். 2–ம் 3–ம் நிபந்தனைகள் இற்றலியின் ஏகாதிபத்திய வெறியையும் நாடு பிடிக்கும் ஆசையையும் நன்கு காட்டுகின்றன. அபிசீனியா விஷயத்தில் மிகவுங் கவலை காட்டிக் கொள்வதாக இற்றலி நடிக்கிறது. இற்றலியிலும் பார்க்க அபிசீனியா சீர்திருத்தத்திற் குறைந்ததல்ல இற்றலியிலேயே சீர்திருத்தமற்ற அநேகர் உளர். அவர்களுக்குச் சீர்திருத்தம், நாகரீகம், என்பவற்றை முதல் அளித்துப் பின் கறுப்பர்களைப்பற்றிக் கவலை கொண்டால் இற்றலிக்கு நலமயிருக்கும். இற்றலி தன் நோக்கத்தை இவ்வளவு நேர்முகமாய்க் கூறிவிட்டது மஞ்சூரியாவை ஜப்பான் எப்படித் தன்வசமாக்கியதோ, அதேபோல அபிசீனியாவையும் தனது பரிபாலனத்திற்குள் அகப்படுத்த இற்றலி தீர்மானித்திருக்கிறது. அதன் தீர்மானத்தை ஏனைய வல்லரசுகள் மாற்றுதல் முடியுமா?

ஃ ஃ ஃ

சாகார் மாகாணத்தில் ஜப்பான் விதித்த நிபந்தனைகளுக்குச் சீன அரசினர் உடன்பட்டு விட்டனரென்று தெரிகிறது. தமக்கு விருப்பமில்லாத சீன உத்தியோகத்தரை நீக்கவேண்டும், ஜப்பானிய உத்தியோகத்தர்க்கிணங்கிய உத்தியோகத்தரை நியமித்தல் வேண்டும் என்ற நிபந்தனைகளைச் சீன அரசினர் ஏற்றுக் கொண்டு விட்டனர். பாவம் அவர்கள்தானென்னசெய்ய வியலும்! அவர்களது நாட்டில் ஒற்றுமை இல்லை. சேனைப் பலம் இல்லை. நீயே துணை என்று அழும் சர்வதேச சங்கமும் ஆரோ செத்தால் ஏனோ அழுவான் என்ற நிலைமையில் மூதகெலும்பற்றுக் கிடக்கின்றது. ஜப்பானியரின் கோரிக்கைக்கு இணங்க மறுத்தால், கடும்போர் நிகழும். பலமற்ற சீனர்க்கே அதனாலும் ஆபத்து அதிகம் நேரிடும். எனவே இருதலைக் கொள்ளியெறும்பின் நிலையில் நின்ற சீன அரசினர் தற்போது குறைந்த தீமை அளிக்கக் கூடியதாம் நிபந்தனைகளுக்கு இணங்கி விட்டனர். மஞ்சூரியாவைப் போலச் செழிப்புள்ள ஓர் மாகாணம் இப்போது ஜப்பான் வசம் வந்துவிட்டது.

ஃ ஃ ஃ

இத்துடன் ஜப்பான் திருப்தியடைந்துவிடுமா? ஒருபோதும் இல்லை. சீனவில் உள்ள செழிப்பான நிலங்களைக் கைப்பற்றிக் கிழைத்தேய இராணியாய் விளங்க வேண்டுமென்பதே அதன் அவா. மெல்ல மெல்லவாய் சீனவைக் கைப்பற்றி, இரு தேசங்களையும் ஒன்றாக்கிவிடும். இங்கிலாந்து முந்நாள், எப்படி வேல்ஸ என்னும் நாட்டைக் கைப்பற்றித் தன்னுடன் இணைத்து இரு நாடுகளையும் பிரிட்டன் என்ற பெயருடன் வழங்குகின்றதோ அதேபோல, ஜப்பானும் சீனவை இணைத்து ஓர் ஏகாதிபத்தியம்வைத்திருக்கக் கங்கணம்கட்டி நிற்கின்றது எனலாம்.

ஃ ஃ ஃ

1942–ம் ஆண்டில் தாமே உலகத்தில் மிகச் சிறந்ததும் முதன்மையானதுமான கடற்படையை வைத்திருப்பதற்கு அமெரிக்கா முனைந்திருக்கிறது இதற்கென 92,000,000 தங்கப் பவுண்களைச் செலவழிக்க அமெரிக்க அரசினர் தீர்மானித்திருக்கின்றனர். அந்தோ! வறுமையும் வேலையின்மையும் தாண்டவமாடும் இக்காலத்தில் அழிவுக்குக் காரணமாய யுத்த தளபாடங்களை அதிகரிப்பதற்கு மாத்திரம் இவ்வாறு பலகோடிக் கணக்கில் பணத்தை வாரிவாரியிறைக்கும் வல்லரசுகளின் மனப்பான்மைஎன்னென்றுகூறுவது!

ஃ ஃ ஃ

இத்தலிய — அபிசீனியப் பிணக்கு, யுத்தம் நேர்ந்தாலல்லாது முடிவுறாது என்று இப்போது வரும் செய்திகளால் அறியக் கிடக்கின்றது. கிழக்காபிரிக்காவில் இற்றலியப் படைகள் யுத்தவெறிகொண்டு நிற்கின்றன. சென்ற சில மாதங்களாக இற்றலியப் படைகள் நாடோறும் அபிசீனியாவுக்கும் போய்க் கொண்டவண்ணமாகவே இருக்கின்றன. இப்படி நடக்கும்போது சர்வதேச சங்கம் ஏன் சமாசம் விளைக்கப் பாடு படுகின்றது!


## லிட்டில்ஸ் ஓரியண்டல்பாம்

எல்லாவலிப்புகளுக்கும் நோவுகளுக்கும்

பாரதநாட்டின் முதன்மையானதும்

சிறந்ததுமான திவ்விய ஔடதம்,

மிருகக்கொழுப்பு கலக்கப்படவில்லை என்பதற்கு

உத்தரவாதம்.

Y 531 (-3/12-35)

# நமது சிறுகதைப் பகுதி.

## பதட்டங்கொண்ட கருணாகரன் அல்லது காஞ்சியின் கடிதம்.

எஸ். கே. எஸ். எழுதுவது.

சென்னை,
28-6-35.

அன்புள்ள கமலாக்ஷி,

க்ஷேமம். உனக்கு க்ஷேமம் பெருகட்டும். நீ எழுதிய கடிதம் கிடைத்தது; அதனை வாசித்ததும் உன் புருஷன் கையில் நீ படும்பாடு சித்திர மெழுதிக் காட்டினாற்போல் என் கண் முன் தெரிந்தது. எனக்கு வரும் கவலை கொஞ்சமல்ல. ஆனாலும் நீ பொறுமையாயிருக்க வேண்டுமென்று சொல்ல விரும்புகின்றேன். அண்ணா ராமேசம் மிகவும் நல்லவர்; நிரம்ப நற்குணம் படைத்தவர்: அன்பர்கட்காக ஆருயிரை வழங்குபவர். ஆனால் ஏதோ தப்பு செய்திருப்பதாக அவர் நினைத்திருக்கிறார். போகட்டும் நீ உறுதியாக மாறாத அன்போடு அவருக்கு மனங் கோணாதவாறு நடந்துகொண்டாயானால் நிச்சயமாகவும் உன்னைப் போற்றத் தொடங்கிவிடுவார். நீங்கள் இருவரும் ஆனந்த சல்லாப சாகரத்தில் அழுந்தி வாழும் நாளை நான் காண்பேன். சில புருஷர்கட்கு மனைவியர்மீது சந்தேக மேற்பட்டுவிட்டால் பெருந் தொல்லையாக முடிவதுண்டு. ஆனால் அத்தகையோர் திருந்திவிட்டால் மிக நல்லவராயிருப்பர். காட்டுக் குதிரை வசங்கிவிட்டால் எவ்வளவு உழைக்கும் தெரியுமா? இதனை விளக்குவதற்காக என் தோழியாகிய கமலாவின் சரித்திரத்தின் பகுதி யொன்றை எழுதுகிறேன். அது சற்றேறக்குறைய கதை போலிருக்கும். அதற்காக கதை யென்று நினைத்துவிடாதே.

* * *

இரவு பன்னிரண்டு மணி. இருள் மயம். எங்கும் ஒரே நிம்மதி, உறக்கம், நிச்சஞ்சலம். அத்தகைய விடத்தில் காணப்பட்ட ஓர் அழகிய பங்களாவின் அறை யொன்றில் விளக்கெரிந்துகொண்டிருந்தது. நவ யௌவனம் வாய்ந்த நங்கையொருத்தி ஒரு நாற்காலியிலமர்ந்து ஏதோ எழுதிக்கொண்டிருக்கின்றாள். இரண்டு மூன்று வாக்கியங்கள் வரைந்ததும் ஆழ்ந்த யோசனையில் மூழ்கினாள். பின்னரும் யோசித்தாள். இடையிடையே மேஜைமீது கிடந்த 'விஜயபாநு' பத்திரிகையை எடுத்துத் திருப்பிப் பார்ப்பதும், பின்னர் சிந்திப்பதும், எழுதுவதுமாகவிருந்தாள்.

அப்போது அறையின் சுவரில் மாட்டப்பட்டிருக்கும் கடியாரத்தில் மணி 1 அடித்தது. அடித்து முடிந்ததும் இளைஞன் ஒருவன் மெல்ல அறையினுள் பிரவேசித்து, பெண்மணியின் பின்பக்கமாக வந்து நின்று, அவள் எழுதியிருப்பதைக் கண்டதும், பெருத்த ஏமாற்றமடைந்தவன் போல கலக்கமடைந்தான். இதை, எழுதுவதிலேயே ஏகமுகமாய் ஈடுபட்டிருந்த மங்கை கவனிக்கவில்லை. பல எண்ணங்கள் பமர்பமர் என்று இதய மண்டலத்தில் தோன்றுவதும், மறைவதுமாக விருந்தன வென்பதை அவ்வாலிபனின் வதனம் விளக்கிக் காட்டிற்று. திடீரென்று பெண்மணி திரும்பிப் பார்த்ததும் இளைஞனைக் கண்டனள். மெல்ல காகிதத்தை மறைத்து வைத்துக்கொண்டு, அன்றிரவு நாடகம் நன்றா யிருந்ததா என்ற கேள்வியை புன்னகை பூத்த முகத்துடன் அக் கோமளாங்கி கேட்டாள். வாலிபனிடமிருந்து பதில் வரவில்லை. "என்ன எழுதிக்கொண்டிருந்தாய் இரவு வேளையில்?" என்று கேட்டான் இளைஞன்.

பெண்:—நாடகத்திற்குச் சென்ற தங்கள் வருகையை எதிர் நோக்கிக் கொண்டே யிருந்தேன். அந் நேரத்தில் எனது தாயாருக்கு கடிதம் எழுதலாமென்று நினைத்து பேனாவை கையிலெடுத்ததும், தாங்கள் வந்துவிட்டீர்கள்; வேறொன்றுமில்லை. நாடகம் நன்றாயிருந்ததா?

நேரமாகிவிட்டதென்று கூறி இளைஞன் படுக்கையறையை நண்ணினான். கருணாகரன் எம். ஏ. (அவ்வாலிபனின் பெயர்) இம்பீரியல் பாங்கியில் மாதம் 350 ரூபாய் சம்பளத்தில் பெங்களூரில் உதவி மானேஜராயிருக்கின்றான். நெருக்கடியான நகரத்தில் எல்லையை விட்டு 6 மைலுக்கப்பாலுள்ள மணிபுரம் என்னும் கிராமத்தில் தனதுமனைவியாகியகமலாவுடன் தங்கிவருகின்றான். கமலாவும் பி. ஏ. பரீக்ஷை தேறியிருக்கின்றாளென்றாலும் அரசாங்க உத்தியோகத்திற்குப் போகவில்லை. கணவனும் மனைவியும் கற்றவர்களாகையால் அவர்களது இல்லறம் இன்பமயமாகவே யிருந்தது என்று கூறவும் வேண்டுமா! இருவரும் இணைபிரியா நேசம் கொண்டவர்கள், மனத்தாங்கலென்பது மருந்துக்குக் கூடவும் அவர்களிடையே கிடையாது. விட்டுக்கொடுக்கும் குணம் இருவருக்கும் இருந்தமையால் தம்பதிகள் இன்பமாகக் காலம் கழித்து வந்தார்கள். ஆனால் அன்று அப் பெண்மணி எழுதியிருந்ததை நேரில் கண்டதும் கருணாகரனின் சித்தம் மேலும் கீழுமாக ஆடியது. சந்தேகம் அழுக்காறு மனத்தில் இடம் பிடித்துக்கொண்டன.

தனது ஆசை மனைவி தன்னை ஒரு பொழுதும் ஏமாற்றமாட்டாளென்று மனச்சாக்ஷி கண்டிப்பாகக் கூறினாலும் அடுத்த நிமிடம் சந்தேக எண்ணங்கள் தோன்றின. கருணாகரனுக்கு மன நிம்மதி ஏற்படவில்லை, "காதற் கனியே" என்று எந்தப் பெண்ணாவது தாயாருக்கு எழுதுவளா? மாட்டாள் என்று கூறியது மனம். இவ்வெண்ணங்கள் கருணாகரனை உள்ளும் புறமுமாக உருக்கின. அளவு கடந்த அன்புடன் இதுகாறும் நேசித்து வந்த கமலா தன்னை ஏமாற்றியே வந்திருக்கின்றாளென்றும், அவளுக்கு அந்தரங்கமாகக் கள்ளக் காதலன் ஒருவன் இருக்கவேண்டுமென்றும் நினைக்க நெஞ்சம் படபடவென துடிதுடித்தது. கண்கள் சிவந்தன. தலை சுழன்றது. ஆ! என்று படுக்கையில் சாய்ந்தான். கருணாகரன் பெண்களை நம்பக்கூடாது என்ற பண்டைப் புலவர்களின் பாடல்கள் உண்மைதான் என்று நம்பிக்கொண்டான். 'கண்ணாற் காண்பதும் பொய்; காதாற் கேட்பதும் பொய்; ஆராய்ந்தறிவதே மெய்' என்பதுக்கேற்ப நன்கு ஆராய்ந்து உண்மையறிய வேண்டுமென்று தீர்மானம் கொண்டான்.

சந்தேகத் தோற்றமுடன் நோக்கிய கருணாகரனுக்கு கமலாவின் நடவடிக்கைகள் எல்லாம் சந்தேக மயமாகவே யிருந்தன. வாழ்க்கையின்பம் மெல்ல மெல்ல மறைய ஆரம்பித்தது. நாட்கள் சில கடந்தன. கணவன் தன் மீது நம்பிக்கையில்லா திர்மானம் கொண்டிருக்கின்றான் என்பதை நங்கை உணராமலிருக்கவில்லை.

ஒரு நாள் 100 ரூபாய் கமலாவிற்கு மணி யார்டர் வந்தது. உடன் சில ஆடைகளை அவசரமாக வாங்கிக்கொண்டு தனது தாயார் வீட்டிற்குப் போவதாக விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டாள். மணியாடர் வந்ததைக் குறித்து ஒன்றும் கூறாமலிருந்ததையும், அழகிய ஆடைகள் வாங்கியதும் உடனேயே தாயார் வீட்டிற்குப் புறப்பட்டதும் கருணாகரனுக்கு அணுவளவேனும் பிடிக்காததோடு, அவள் மீது பெருத்த அவநம்பிக்கை கொள்ளவும் ஏதுவாயிற்று. இனிமேல் கமலாவுடன் வாழ்வது பிசகு என்று எண்ணி, வக்கீல் மூலம் விவாகரத்து நோட்டீஸ் எழுதும்படி 5 ரூ. கொடுத்து ஏற்பாடு செய்தான். பின்னர் கமலாவின் அறையை பரிசோதித்தான். மேஜை மீது அந்த மாதம் 'விஜயபாநு' பத்திரிகை காணப்பட்டது. அதை எடுத்துப் பார்த்தான். அப் பத்திரிகையில் காதற் கடிதப் போட்டியில் மிஸஸ். கமலாகருணாகரன், பி. ஏ., Mrs. Kamalakarunakaran, B A.,) முதற் பரிசு பெற்றிருக்கின்றாளென்றும், அப்பெண்மணிக்கு பரிசுத் தொகையான 100 ரூபாயை உடனேயே மணியாடர் செய்து அனுப்பப்பட்டதென்றும் விளம்பரப்படுத்தியிருந்தது. கருணாகரனுக்கு, தனது கண்களை நம்ப முடியவில்லை, உண்மைக் காதல் படைத்த உத்தமியைக் குறித்து அவநம்பிக்கைக்கொண்டது பற்றி ஆறுத்துயர் கொண்டான். "ஆராய்ந்தறிவதே மெய் என்ற ஆப்த மொழியின் உண்மையை அனுபவ பூர்வமாகக் கண்டுகொண்டான். கமலாவை அழைத்து வர வேண்டுமென்று நிச்சயித்தான். அதற்குள் கமலா வந்து சேர்ந்தாள். அந்தச் சமயம் வக்கீல் குமாஸ்தா நோட்டீஸை சரிபார்க்கக் கொண்டுவந்தான். அதனைப் பொடுக்கெனப் பிடுங்கி வாசிக்கத் தொடங்கினாள் கமலா. அது கண்ட கருணாகரனுக்கு அவள் முகத்தில் விழிக்க முடியவில்லை. நாணத்தால் முகத்தை மூடிக்கொண்டான். அவன் உடம்பு பயத்தாலும் பச்சாதாபத்தாலும் பறிந்தது. கமலா விவாகரத்து நோட்டீஸ் என்று கண்டதும் ஹோ! என்று சிரித்துக்கொண்டு, புருஷன் கைகளைப் பிடித்திழுத்து கேலி செய்தாள். "அன்பே! என்னை மன்னிக்கவும் நான் மிகவும் ஆத்திரக்காரன்!" என்று கூறி கருணாகரன் கமலாவிடம் மன்னிப்புக் கேட்டுக் கெஞ்சினான்.

கமலாக்ஷி,

இது எவ்வளவு ரசமான கதை பார்த்தாயா? இதுபோல் உன் புருஷனும் உன்னிடம் மன்னிப்புக் கேட்கும் நாள் வரும். சற்றுப் பொறு.

அன்புள்ள சகோதரி,
"காஞ்சி."

# செட்டிப்பிள்ளைகளின் அநியாயவட்டி.

## புகையிலைத் தொழிலுக்கு வந்தகேடு அதற்குக் காரணர் யார்?

### யாழ்ப்பாணமுற்றவெளியில் மகாகூட்டம் ஸ்ரீ இராஜரத்தினத்தின் நன்மொழிகள்.

(நமது நிருபர்.)

யாழ்ப்பாணத்தில் புகையிலைத் தொழிலில் ஈடுபட்டவர்களையும், அதில் சிரத்தையுள்ளவர்களையும் கொண்ட மகா கூட்டம் ஒன்று சென்ற ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் முற்றவெளியில் ஸ்ரீ வை. துரைசுவாமி அவர்களின் தலைமையிற் கூடியது.

யாழ்ப்பாணப்—மலையாளப் புகையிலை வியாபார ஐக்கியசங்கத் தலைவரான ஸ்ரீ T. C. இராஜரத்தினம் அவர்கள் முதலாவதாகப் பேசினார். அவர் பேசியதன் சாரம் வருமாறு:—

"ஓர் நாட்டின் முதுகெலும்பனையவர் அந் நாட்டின் விவசாயிகளேயாவர். எமது நாட்டின் பிரதான தொழில் விவசாயமே. அஃதின்றேல் எம் நாடு அதோகதி யடைந்துவிடும் என்பதற்கையமின்று. அரசாங்க உத்தியோகங்களும் ஏனைய உத்தியோகங்களும் எம்மெல்லோரையும் சீராக்கிவிடா. அன்றியும் எம்மெல்லோர்க்கும் போதிய உத்தியோகங்கள் இருக்கின்றனவா? உத்தியோகங்கள் எம்மில் ஒரு சிறு பகுதியினர்க்கு மாத்திரமேபோதும். மற்றவர்கள் கைத்தொழில் விவசாயம் என்பனவற்றில் ஈடுபடுதல்வேண்டும். இங்கே நாம் வர்த்தகம் செய்யக்கூடிய பிரதான பொருள் புகையிலை. இங்கே 4000 ஏக்கர் நிலத்தில் 12000 கண்டி புகையிலை ஆண்டு தோறும் விளைவிக்கப்படுகின்றது. இதில் 3இல் 1பங்கு மலையாளப் புகையிலையாகும். இப் புகையிலை திருவாங்கூருக்கு அனுப்பப்படுகின்றது.

ஓர் காலத்தில் மிகுந்த செல்வந்தராயிருந்த அநேக புகையிலைவியாபாரிமார், இப்போது 8-ம் கட்டளைக்குக் கையெழுத்திட்டிருப்பதைப் பற்றி நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். இவர்கள் திருவாங்கூரில் உள்ள புரோக்கர்கள்மூலமாகத் தமது வியாபாரத்தை நடாத்தி வந்தனர். புகையிலை விளைவிப்பவன் தனது முதலையும், ஏதும் இலாபத்தையும் பெறமுன்னர், அவனுடைய புகையிலை, உள்ளூர் வர்த்தகர், பின் செட்டி, பின் திருவாங்கூர் தரகர் ஆகிய இவர்கள் யாவரினதும் கையிற் சிக்கவேண்டும். உள்ளூர் வர்த்தகருக்குச் செட்டி 18 விகித வட்டியிற் பணத்தைக் கடனாகக் கொடுக்கின்றார். அத்துடன் விளைந்த புகையிலையைத் தனது கிட்டங்கிக்கே கொண்டுவரவேண்டும் என்றும் ஓர் கட்டுப்பாடு விதிக்கின்றார். அத்துடன் தம்மால் அமர்த்தப்படும் கப்பலிலேயே புகையிலை திருவாங்கூர்க்குச் செல்லவேண்டும் எனும் இன்னோர் நிபந்தனையும் செட்டிமாரால் விதிக்கப்படுகிறது.

இதற்கான செலவுகள் எல்லாம் தள்ளி ஏதும் மிச்சமிருந்தால், செட்டி கொஞ்சப் பணத்தை உள்ளூர் வர்த்தகரிடம் கொடுக்க, அதுவே புகையிலை விவசாயிகளுக்குப் பிரிக்கப்படுகின்றது. இப்படியான ஓர் முறையினால், புகையிலை விவசாயிக்கு, அவர் விட்ட முதலுக்கும், பட்ட பிரயாசைக்கும் தக்க ஆதாயம் கிடைப்பதில்லை. எமது உள்ளூர் வர்த்தகர்தானும் ஏதும் இலாபம் அடைகின்றனரா? மலையாளப் புகையிலை வியாபாரத்தினால், நாம் அதிகம் பயனை அடையவே இல்லை. இதுகாறும் நடந்துவந்த முறையின்படி புகையிலை விவசாயி உள்ளூர் வர்த்தகரினும், உள்ளூர் வியாபாரி, வட்டிக்குப் பணங்கொடுக்குஞ் செட்டி, மலையாளத்தரகர் என்பவர்கள் தயவிலும் தங்கியிருக்கவேண்டி யேற்பட்டது. இப்படித் தங்கியிருக்கும் நிலைமையே எம் புகையிலைத் தொழிலுக்குச் சகிதகையைக் கொண்டுவந்ததெனலாம். இந்தக் கேவல நிலைமையைப் போக்குதற்காகவே யாழ்ப்பாணம்-மலையாளப்புகையிலை விற்பனை ஐக்கியசங்கம்நிறுவப்பட்டது. செட்டிப்பிள்ளைகளின் வட்டி விகிதம் புகையிலை விவசாயிகளின் உதிரத்தை உறிஞ்சிவிட்டது. மேலும், விவசாயியின் புகையிலை விலை குறிக்கப்பட்ட நேர்மையான விகிதப்படி மதிப்பிடப்படுவதில்லை. உள்ளூர் வர்த்தகரும் அவரது தரகர்மாரும் இவ்வளவு புகையிலைதான் இத; இதற்கு விலை இதுவே என்று கணித்தால் அக் கணிப்பிற்கு விவசாயி உடன்படவேண்டும். புகையிலைவிற்பனை ஐக்கிய சங்கத்தினால் இக் கேவலமானமுறை ஒழிக்கப்பட்டுவிட்டது, விவசாயியின் சமுகத்திலேயே அவரது புகையிலையைச் சங்க உத்தியோகத்தர் தினிசு தினிசாகப் பகுத்து விலையை மதித்து அவ்விலையில் 100க்கு 60 விகிதமான பணத்தை உடனேயே அவ்விவசாயிக்கு அளிக்கின்றனர். மீதிப்பணம் முழுவதும் புகையிலை விற்கப்பட்டவுடன் அவ்விவசாயிக்கு அளிக்கப்படுகிறது. சங்கத்திற்கு இவ்வாறு புகையிலையை விற்கும் ஒவ்வோர் விவசாயியும் 5 ரூபா சந்தாப்பணம் கொடுத்தவுடன் சங்கத்து அங்கத்தவராகின்றார். எனவே, இச்சங்கம் யாருடையது? புகையிலை விவசாயிகளினதே.

இச்சங்கத்துக்கு அரசினர் 3½ லட்சம் ரூபா 5 விகித வட்டியிற் கடனாக வழங்கியிருக்கின்றனர். ஆண்டுதோறும் இவ்வளவு தொகையைத் தர அரசினர் நிச்சயித்திருக்கின்றனர். இப்படி அரசினர் உதவிசெய்தற்குக் காரணம் என்ன? இச்சங்கம் ஓர் இன்றியமையாத நிலயம் என்பதனை அரசினர் மனப்பூர்வமாக உணர்ந்திருக்கிறபடியால் தான் இப்படிப் பணஉதவிசெய்ய முன்வந்தனர். இச்சங்கம் விவசாயிகளின் நன்மைக்காகவே ஏற்படுத்தப்பட்டுள்ளது. சங்கத்தால் அனுப்பப்பட்ட புகையிலை மிகவும் திறமானது என்று திருவாங்கூரில் உள்ளவர்கள் மிகவும் வியந்து கூறியிருக்கின்றனர்!

இப்படியிருப்பவும் சங்கத்திற்கு மாறாக ஓர் சிலர் விஷமப்பிரசாரம் செய்து வருகின்றனர். 'உந்தச் சங்கம் எத்தனை நாளைக்கு? சீக்கிரம் அழிந்துபோகும்' என இந்தச் சிலர் விவசாயிகளுக்குச் சொல்லிவருகின்றனர்.

கூட்டத்தில் உள்ள ஒருவர்: புகையிலை மலையாளத்தில் விற்கப்படவில்லை என்றே கூறுகின்றனர்.

ஸ்ரீ இராஜரத்தினம்: புகையிலை அங்கே நல்லாய் விற்கப்படுகின்றது. விற்பனை சம்பந்தமான அறிக்கையைச் சங்கம் ஒழுங்காகப்பெற்றுவருகிறது.

மேலும் ஸ்ரீ இராஜரத்தினம் கூறியதாவது:—

"திருவனந்தபுரத்திற் புகையிலை இறக்குமதியாக 10 ஏஜெண்டுகள் உண்டு. அவற்றுள் எமது சங்கமும் ஒன்று. மற்றும் ஒன்பதில் 3 பேர் யாழ்ப்பாணத்தவர். ஏனையர் திருவனந்தபுரத்தைச் சேர்ந்தவர்களே! எமது சங்கம் புகையிலை ஏற்றுமதி செய்யமுன், இந்த ஒன்பது பேரும் ஒன்றுசேர்ந்துசங்கத்திடமிருந்து புகையிலைவாங்க வொண்ணாதென்றும், அப்படியின்றி வாங்கினால் வாங்கியவர் 10000 ரூபா தண்டம் இறுக்கவேண்டும் என்றும் பரஸ்பரம் ஓர் உடன்படிக்கையைச் செய்தனர். இப்படியாக அவர்கள் தமக்குள் உடன்படிக்கை செய்ததன் காரணம் என்ன? இங்குள்ள புகையிலை விவசாயிகளின் நன்மையையிட்டா? ஏழை விவசாயிக்கு மண்போட்டுத் தாம் நல்லாயிருக்கவேண்டும் என்ற ஒரே எண்ணமே இவர்களை இவ்வுடன்படிக்கையைச் செய்யும்படி தூண்டியது. நான் இச்சங்க விஷயமாகத் திருவாங்கூர்க்குப் போனபோது ஒன்பதின்மரில் ஒருவர் என்னிடம்வந்து நாம் அனுப்பும் புகையிலையை விதந்து தனது தமையனின் பெயரில் எம் புகையிலையைத் தான் வாங்கவேண்டும் என்றார். சங்கத்தின் ஏஜென்டாக அங்கு நிற்கும் மிஸ்டர் I. X. பெரீரா எமக்காக அங்கே நல்லவேலை செய்கின்றார். எமக்கு மாறாக விஷமப்பிரசாரம் செய்துவருவோர்க் கெதிராகவும் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கச் சங்கம் நிச்சயித்திருக்கின்றது. விவசாயிகள் இச்சங்கத்தில் மிகுந்த மதிப்பும் நம்பிக்கையும் வைத்திருக்கின்றனர். அந்நம்பிக்கைக்கும் மதிப்புக்கும் பாத்திரமாகச் சங்கம் தனது தொழிலாற்றும் என்பதை விவசாயிகளுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

விவசாயிகளே! புகையிலைத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களே! நீங்களும் உங்கள் தொழிலும் நன்கு உஜ்ஜீவிக்கவேண்டுமானால் இச்சங்கத்தில் நம்பிக்கைகொண்டு எக்கதி சேர்ந்த காலத்தும் கடமை பிசகாது கர்மம் ஆற்றுமின்! (வரும்)

# நாற்றிசை நோக்கு.

('வாஸவன்' வரைவது.)

சென்ற பிரசுரத்தில் வெளிவந்த எனது கடிதம் ஒன்றில் ஓர் தவறுதல் நேர்ந்து விட்டது ஸ்ரீமாந் க. கடேசபிள்ளை அவர்களுக்கு எழுதிய கடிதத்தின் இடையில் "ஆரியம் செந்தமிழ் ஆங்கிலம் என்னும் முப்பாஷையிலும் உள்ள களஞ்சியங்களை அநுபவித்த தாங்கள் அரசாங்கசபையிற் பயனில் சொற்களைப் பேசாது அமைதியுடனும் ஆறுதலுடனும் எடுத்த விஷயத்தை நிதானமாக அந்த மாபெருங் கிழவராம் சேர். பொன் இராமநாதன் அவர்களைப் போலப் பேசி வருகின்றீர்கள் என்பதைப் பலர் சொல்லக்கேட்டும்........." என்பதற்குப் பதிலாக "........அமைதியுடனும் ஆறுதலுடனும் எடுத்த விஷயத்தை நிதானமாக அந்த மாபெருங் கிழவரும் போலப் பேசி வருகின்றீர்கள் என்பதை சேர். பொன இராமநாதன் அவர்களைப் பலர் சொல்லக் கேட்டும்" என வந்திருந்தது; அச்சுக்கோக்கும்போது தவறுதலாக வரி மாற்றம் நிகழ்ந்தமையே இப்பிழைக்குக் காரணம்.

°° °° °°

இற்றைக்கு ஒரு மாதத்திற்குமுன் எனது "நாற்றிசைநோக்கில் சாவகச்சேரியில்உள்ள விருட்சோபகார வர்த்தகர் ஒருவர் யாழ்ப்பாணம் புகையிரதஸ்தானத்தில் ¼ இறாத்தல் அபினுடன் பிடிக்கப்பட்டார் என்றும், அபின் அவரிடம் சென்றதோ அல்லது அவரே அபினை வைத்திருந்தாரோ என்பது அவருக்கும் பரிசோதகருக்கும் இறைவனுக்குந்தான் தெரியும் என்றும் குறிப்பிட்டிருந்தேன்; என் கூற்று உண்மையாகி விட்டது. நீதிபதியே இவ்வழக்குச் சந்தேகத்திடமானதாயிருப்பதால் எதிரிக்கு அச்சந்தேகத்தின்பயனை அளித்து அவரை விடுதலை செய்தார் என்று தெரிகிறது. இந்தச் சந்தேகம் ஒன்று தோன்றிராவிட்டால், ஷெ வர்த்தகர் அல்லது பொலிஸ் பரிசோதகர் ஆகிய இருசாரார்க்குள் ஒரு பகுதியார்க்குத் தீமை நேர்ந்திருக்கலாம். இப்போது இருபகுதியாரும் மூளைக்கோளாறு இன்றித் தலை தப்பினது தம்பிரான் புண்ணியம் என ஒருவாறு நிம்மதியாயிருக்கலாம்.

°° °° °°

அனல் பெருந்தொகைப்பணம் செலவழித்துக் கொழும்பு நியாயவாதி ஒருவரை இறக்குமதி செய்வித்து ஓர் பரிசோதகரிடம் அருவருப்பைத் தரத்தக்க கேள்விகளைக் கடாவுவித்து, இவ்வழக்கிலிருந்தும் தப்பியுள்ள ஷெ வர்த்தகர் தாம் தப்பியதுடன் திருப்திபடையவில்லையாம். குறித்த ஒரு சிலரிடம் ஓர் தொகைப் பணத்தை லஞ்சமாகப் பெற்றே தன்னை இப்படி அவமானப் படுத்தும்படி இவ்வழக்கில் மாட்டினர் என்று பொலிஸ் பரிசோதகர்க்கு மாறாகப் பெட்டிசம் அனுப்பப்போகின்றனர் என்பது வதந்தி. அம்மம்ம! மழைவிட்டும் தூவானம் மாறவில்லையே!

°° °° °°

அபாயகரமான நிலைமையிலிருக்கும் நோயாளியின் சரீரத்தில் மற்றொருவருடைய உதிரத்தைச் செலுத்தி உயிர்ப்பிக்கும் தொண்டு பல இடங்களிலும் அதிகரித்துக் கொண்டே வருகிறது. போன வருடம் லண்டனில் மட்டும் 4000 பேர்க்கு இந்தச் சிகிச்சை செய்யப்பட்டது கொழும்பு ஆஸ்பத்திரியிலும் இந்தச் சிகிச்சை முறையை அநுசரிக்க அதிகாரிகள் முயற்சிக்கின்றார்களாம். ஆனல் உதிரம் கொடுப்பது யார்? குறைந்த கணக்கு 300 பேராவது வேண்டும். "நாங்கள் தேசத்தொண்டு புரிவதற்காகவே இருக்கிறோம். சமூகத்தொண்டிற்காகவே, உயிர் வாழ்கின்றோம். அதனாலேயே அரசாங்கசபைக்குள் நுழைய விரும்புகின்றோம் என்று பாக்கப்பேசும் தேசத்தொண்டர்கள், அரசாங்கசபைத் தேர்தல் வரமுன் உதிரமளிக்கும் தொண்டர்களாகக் கொழும்பு ஆஸ்பத்திரியிற் பதிவு செய்து கொள்வார்களாக

°° °° °°

இடைக்காட்டுப் புவனேஸ்வரி கோவில் சம்பந்தமாக நேர்ந்துள்ள பிணக்கு வலிகாமம் மணியகாரன் ஸ்ரீ வேலுப்பிள்ளையவர்களது முயற்சியின் பயனாகத் தீர்ந்து விட்டதென நான் எண்ணி மகிழ்ந்திருந்தேன்; ஆனல் அக்கோவில் சம்பந்தமான பிணக்கு, மீண்டும் தொடங்கி இப்போது நீதிஸ்தலத்திற்கும் சென்று விட்டதென அறிகிறேன். இறைவனின் இருப்பிடம் என்று கருதப்படும் இவ்வாலயங்கள் சம்பந்தமாக எழும் அற்ப பிணக்குகளும் நீதிஸ்தலங்களுக்குச் செல்லுமாயின் எம் கதி என்னுகும்

°° °° °°

கோவில்கள் ஒருவர் இருவரது சுபகலத்திற்காகக் கட்டப்படவில்லை. ஓர் கிராமத்து சைவமக்கள் எல்லவரினதும் ஆன்மார்த்த முன்னேற்றத்தை நோக்கமாகக்கொண்டே அவை ஸ்தாபிக்கப்பட்டன என்பதைக் கோவில் மானேஜர்மாரும், பூசகர்களும், அக்கோவிலில் வழிபாடு செய்பவர்களும் உணர்ந்தால் என்ன? இந்த யாழ்ப்பாணத்தில் ஆலயங்கள் சம்பந்தமாக நிகழும் பிணக்குகளுக்கும் வியாச்சியங்களுக்கும் ஓர் கணக்குண்டா? ஓரிடத்தில் மானேஜர்க்கும் பூசகர்க்குமிடையே பிணக்கு; ஓரிடத்தில் பூசகர்க்கும் வழிபடுவோர்க்குமிடையே பிணக்கு; ஓரிடத்தில் வழிபடுவோரும் பூசகரும் ஒன்றாய்ச் சேர்ந்து மானேஜருடன் பிணங்குகின்றார்கள். சில இடங்களில் மானேஜர் பூசகர் என்பவர்க்கிடையே பரஸ்பரம் பிணக்குநேர, ஊரவர்களும் கட்சிபிரிந்து பரஸ்பரம் மாறாட்டு பகைமை கொள்ளுகிறார்கள்.

°° °° °°

சாவகச்சேரி அபின்வழக்கு விசாரணையின்போது எதிரியாயுள்ளவர், தமது வாதத்திற்கு ஆதாரமாக இந்துசாதனப் பத்திரிகையின் பழைய பிரதி ஒன்றைக் காட்டினர். அப்போது ஆங்குநின்ற அசோகதிடகாத்திர தேகியான பொலிஸ் பரிசோதகர் ஒருவர் "இந்துசாதனமா?" என்று ஓர் ஏளனச் சிரிப்புச் செய்தாராம். இந்துசாதனத்தின் மீது இப்பொலிஸ் பரிசோதகர்க்குள்ள வெறுப்புக்குத்தான் காரணம் என்னவோ? வெறுப்பிருந்தாலும், பாரபட்சமின்றிக் கர்மம் ஆற்றவேண்டிய இவர் நீதிஸ்தலத்தில் தம் திருவாயைத் திறந்து தம் நகைப்பைக் காட்டலாமா? என்று நான் கேட்கிறேன்.

°° °° °°

இந்த இந்துசாதனம் 48 வருடகாலமாக இவ்வியாழ்ப்பாணத்தில் நிலவுகின்றது இந்த 48 ஆண்டு காலத்திற்கிடையிலும் இப்பத்திரிகை, எத்தனையோ பொலிஸ் உத்தியோகத்தர் இங்குவந்து போவதைக் கண்டிருக்கிறது. ஒரு சிலர்க்குத் தேகவியோகமும் எழுதியிருக்குமென நம்புகிறேன். எனவே இப்பத்திரிகையின் பெயரைக் கேட்ட அளவிலேயே புன்முறுவல் பூத்த பரிசோதகரைப்பற்றி இப் பத்திரிகைக்கு நன்மையுமில்லை தீமையுமில்லை எனலாம்.

°° °° °°

ஊர்க்குள் அமைதி நிலவவேண்டுமானல் குற்றங்கள் குறையவேண்டுமானல், பொது ஜனங்களின் அபிப்பிராயத்தை பிரதிபிம்பித்துக் காட்டும் பத்திரிகைகளுக்கும், பொலிஸ் பகுதியார்க்குமிடையே பரஸ்பரம் ஒற்றுமையும் ஒத்துழைப்பும் இருக்கவேண்டும். பொலிசாரது செயலைப் பத்திரிகைகள் கண்டிக்கவேண்டி ஏற்பட்டால், பொதுநன்மை கருதிக் கண்டிக்கவேண்டும். பொலிசார்மீதோ, அவர்களது உத்தியோகத்தர்மீதோ பத்திரிகைகள் கோபம் கொள்ளக் காரணம் இல்லை. அவர்கள் தவறுதல் செய்யுங்காலத்தில் அவர்களுக்கு நன்மதியுரைப்பான்வேண்டிப் பத்திரிகைகள் இடித்துரைத்தால், தூக்கணங்குருவிமீது குரங்கு கொண்டதுபோலக் கோபம் கொள்ளலாகாது.

---

## நெருப்பவிக்கும் பெரியயந்திரம்.

14 தொன் நிறைகொண்டதும் 65000 ரூபா விலைகொண்டதுமான ஒரு பெரிய நெருப்பவிக்கும் யந்திரம் இங்கிலாந்திலிருந்து இப்பொழுது கொழும்பிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றது. இது போன்ற பெரிய யந்திரம் இலங்கைக்கு முன் எக்காலத்தும் வந்ததில்லையாம்.

---

## கண்டியிற் பெருமழை.

பலநாட்களாய்க் கண்டியில் மழையில்லையாக அதனல் ஸ்நாநபானத்திற்கும் பயிர்களுக்கும் மாஞ்செடிகளுக்கும் மிருகங்களுக்கும் போதிய தண்ணீர் அகப்படாமற் பல சங்கடங்கள் நேர்ந்தன. இரண்டு மூன்று தினங்களுக்குமுன் கண்டியிற் பெருமழை பெய்தமையினல் இக்கஷ்டங்களனைத்தும் ஒழிந்தன.

# உலகின் யுத்த வெறி

## மகாயுத்தத்திற்குப் பின்னும் உலகம் திருந்தவில்லை.

## எங்கும் கலகங்களும்: யுத்தங்களும்.

ஐரோப்பிய மகா யுத்தத்திற்குப் பிறகு ஒரு வருஷமாவது உலகில் யுத்த முழக்கமில்லாமலிருந்ததில்லை. சில தேசங்களில் உள்நாட்டுக்கலகங்கள் இடைவிடாமல் உறுமிக்கொண்டிருப்பதையும், மற்ற தேசங்கள் ஒன்றையொன்று தாக்கிக் கொள்வதையும் நாம் காண்கின்றோம்"

மேற்கூறிய வரலாறு "லிட்டாறி டைஜஸ்ட்" என்ற பத்திரிகையிலுள்ள ஒரு கட்டுரை மூலம் வெளியாகிறது. இக்கட்டுரையின் மொழிபெயர்ப்பைக் கீழே காணலாம்

1919-ம் வருஷத்தில் வெர்சேல்ஸ் உடன்படிக்கை ஏற்படுவதற்கு முன்னும், பின்னும் சோவியத் ருஷியா தன்னைச் சுற்றியுள்ள சிறு தேசங்களோடு யுத்தம்செய்து கொண்டிருந்தது. ருஷியாவின் பெரிய விரோதிகளில் ஒன்றாகியபோலாந்து 1920ம் வருஷத்தில் போருக்குக் கிளம்பியது போலந்தின் விமான நிலையமொன்றை வெடி குண்டுகளால் தகர்த்தது.

1920-ம் வருஷ ஆரம்பமுதற் கொண்டு சர்வதேசசங்கம் அமுலுக்குவந்தது. ஆயினும் பவேரியா, கொரியா, எகிப்து, ஹங்கேரி, பார்சிகம் ஆகிய நாடுகளில் போராட்டங்கள் இல்லாமலில்லை. அமிர்தசரசில் படுகொலை நடந்து ஹங்கேரியில் யூதர்களும், அபேதவாதிகளும் விரட்டப்பட்டனர்.

1922 ம் வருஷத்தில் துருக்கி கிரீஸ் தேசத்தை எதிர்த்து யுத்தத்தில் தானிழந்த பிரதேசத்தை அடைய முயன்றது கிரேக்க படைகளை முறியடித்து, பல நகரங்களையும் நாசமாக்கி துருக்கிப்படைகள் ஸ்மர்ணவுக்குள் பிரவேசித்தன

1922-ம் வருஷத்தில் ஐரிஷ் சுயேச்சை நாடு ஸ்தாபிக்கப்படும்வரை அயர்லாந்தில் கொலைகளும், அடிபிடிகளும் சர்வசாதாரணமாக நடந்துகொண்டிருந்தன 1919 முதல் 1921வரை நடைபெற்ற ஆங்கிலோ-ஐரிஷ் யுத்தத்தினல் அயர்லாந்துக்குப் பெருஞ் சேதங்கள் உண்டாயின. கார்க் நகரின் ஒருபகுதி முழுவதும் எரிக்கப்பட்டது அரசியல் விரோதமும் மத சம்பந்தமான எதிர்ப்பும் நாளுக்கு நாள் வலுத்து வந்தன. டப்ளின் நகரில் மிக அழகான கட்டிடமென கருதப்படும் சுங்கவரி நிலையம் சுட்டு வீழ்த்தப்பட்டது.

அடுத்த வருஷத்தில் இத்தாலியின் அதிகாரத்தை பாஸிஸ்டு கட்சியினர் கைப்பற்றினர். இதே வருஷத்தில் மொராக்கோவிலும் இந்தியாவிலும், சீனவிலும், கலகங்கள் உண்டாயின. பவேரியா, பல்கேரியா, பிரேஸில் மெக்ஸிக்கோ, ஸ்பெயின் நாடுகளில் கிளர்ச்சி செய்யப்பட்டது.

1923-ல் கிரீஸுக்கும் ஆல்பேனியாவுக்கும் இடையில் ஐந்து இத்தாலிய ராணுவ அதிகாரிகள் கொலைசெய்யப்படவே, இத்தாலி விமானப்படை கிரீஸின் ஒரு பகுதியின்மீது சரமாரியாய் குண்டு மழை பொழிந்தது.

யுத்தத்திற்காக ஜெர்மனி நஷ்ட ஈடு கொடுக்கத் தவறியதை முன்னிட்டு பிரஞ்சுப்படைகளும் பெல்ஜியப்படைகளும் ரூர் பிரதேசத்தை முற்றிக்கையிடவும் ஜெர்மன் படைகள் இவ்விரு துருப்புகளையும் எதிர்க்க வேண்டியதாயிற்று.

1925–26-ல் சிரியாவிலுள்ள டிரூஸ்ச தியினரை விரட்டுவதற்காக பிரான்ஸ் சில யுத்தவீரர்களை அங்கு அனுப்பியதுடன் முடிவில் டமாஸ்கஸ் நகரின் மீதும் சரமாரியாக குண்டு மழைபெய்தது. மொராக்கோவில் ஆதிக்கம் ஏற்படுத்த ஸ்பானியர்கள் செய்த முயற்சியை மொராக்கோ ரிபியர்கள் கடுமையாக எதிர்த்தனர். இந்த எதிர்ப்பில் ரிப்பியர்கள் பிரான்ஸையும் எதிர்த்துப் போராட வேண்டியதாயிற்று.

சீனவிலும் கிரீஸிலும் ஸ்பெயினிலும் போர்த்துகலிலும் மீண்டும் கிளர்ச்சிகள் ஆரம்பமாயின. பிரிட்டிஷ் படைகள் அரபியரை ஒடுக்கப் புறப்பட்ட வருடமும் இதுவே: டிரிபோலியிலிருந்த கிளர்ச்சிக்காரர்களை இத்தாலிய அரசினர் மிருகபலத்தால் அடக்கினர்.

1928-ம் வருஷத்தில் மெக்ஸிக்கோ குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆப்ரிக்கோன் என்பவர் படுகொலை செய்யப்படவும் அந்நாட்டில் பெருங்கலகம் உண்டாயிற்று. பல நாள் போராட்டம் நடைபெற்றபிறகு கலகக்காரர்கள் ஒடுக்கப்பட்டனர்.

இந்தியாவிற் தேசீயக்கிளர்ச்சி மகாத்மாவின் சக்தி ஆயுதம்

1930-ம் வருஷ ஆரம்பத்தில் இந்தியாவில் விடுதலைக் கிளர்ச்சி வலுத்துவிட்டது தேசத்தலைவரான மகாத்மா காந்தி சர்க்காரை மடக்க சத்தியாக்கிரகம் என்னும் ஆயுதத்தை எடுத்தார். உப்பு சத்தியாக்கிரகத்தை இத்தலைவர் ஆரம்பித்தவுடன் இந்தியாவெங்கும் சட்டமறுப்பியக்கம் பிரமாதமாக வலுத்துவிட்டது. சர்க்கார் செய்வதறியாமல், முடிவில் மகாத்மா காந்தியுடன் சமரசம் செய்துகொள்ள வேண்டி நேரிட்டது. இந்தியாவில் சாத்விகச் சட்டமறுப்பு ஆரம்பமானதும் பிரிட்டிஷ் படைகள் எல்லைப்புறத்திலுள்ள கைபர் கணவாயை மூடிவிட்டனர்.

இதே வருஷத்தில் பொலீவியாவில் கலகக்காரர்கள் அந்நாட்டு சர்க்காரைக் கவிழ்த்து, ராணுவ ஆட்சிநடத்தினர், பெருவிலும் ராணுவச் சட்டம் நாடெங்கும் பிறப்பிக்கப்பட்டது. பிரேஸில் குடியரசுத் தலைவரான வாஷிங்டன் லூபி சிறைபிடித்துக் கொண்டுபோகப்பட்டார்.

1931-ல் ஜப்பானியர்கள் மஞ்சூரியாவிலுள்ள முக்கிய இடங்களைக் கைப்பற்றிக் கொண்டபின், தங்களுடைய விமானங்களிலிருந்து ஜப்பானியர்கள் சீன துருப்புகள் மீது குண்டுமாரிபெய்தனர். சர்வதேசசங்கத்தையும் ஜப்பான் அலட்சியம் செய்துவிட்டு ஜப்பான் சீனவுடன் யுத்தத்திற்குத் தயாராயிற்று. பிரிட்டனும் அமெரிக்காவும் ஜப்பானுடைய செயலைக் கண்டித்த போதிலும் ஜப்பான் இக்கண்டனத்தைப் பொருட்படுத்தவில்லை.

தென் அமெரிக்காவில் ஏற்பட்ட புரட்சிகளில் மிகப்பெரியது 1932ல் சில்லிநாட்டில் ஏற்பட்டதாகும். அதேவருஷத்தில் பொலீவியாவுக்கும் பாரகுவேக்கும் யுத்தம் ஆரம்பமாயிற்று. 1933ல் கியூபாவில் மாக்காடோ விரட்டியடிக்கப்பட்டார்.

1929-ம் ஹூ முதற்கொண்டே இபின்சாத் மன்னர் அரேபியாவைத் தனது ஆட்சிக்குள் கொண்டுவந்து விட வேண்டுமென அவாவுற்று வந்தவர். 1934-ல் இவர் ஏமன் இமாமைத் தோற்கடித்து, இமாமின் இராஜ்யத்தைக் கைப்பற்றிக் கொண்டார்.

இவ்வருஷத்தில் ஐரோப்பா வெங்கும் போர்க்குமுறல் காணப்படுகிறது எக்கணத்தில் ஐரோப்பா தீப்பற்றிக்கொள்ளுமென சொல்லுவதற்கில்லை; சான்ஸலர் ஹிட்லரைக்கண்ட இதர வல்லரசுகள் பெரும் பீதியடைந்துள்ளபடியால் ஹிட்லரை ஒடுக்கப்பல வகை முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றன. ஐரோப்பா இவ்வாறு குழப்பமுற்றிருப்பதை அறிந்து முஸோலினி தனது காரியத்தை முடிக்க இதுவே தருணமென நிர்மானித்து விட்டாரெனத் தெரிகிறது. அபிஸீனியாவுக்கு இத்தாலியிலிருந்து புதிய படைகள் அனுப்பப்படுகின்றன.

---

## சைவவித்தியாசாலை மானேசர்மார் சங்கம்.

எம்யாழ்ப்பாணத்துச் சைவத்தமிழ் வித்தியாசாலைகளை சைவசமயபரிபாலன முறையில் நடைபெறத்தக்கதான ஒழுங்குகள் செய்வதற்கும், அரசினரிடம் கல்வி அபிவிருத்திக்குரிய வகையில் வேண்டிய சலாக்கியங்களைக் காலத்துக்குக்காலம் பெற்றுக் கொள்ளுவதற்கும், சைவத்தமிழ் வித்தியாசாலைமனேஜர்மாரின் சங்கமொன்று நிறுவப் படவேண்டியது அத்தியாவசியகமெனக் காணப்படுகிறது.

ஆகையால் அதன் பொருட்டு யாழ்ப்பாணத்திலுள்ள சைவத்தமிழ் வித்தியாசாலை மனேசர்மாரின் ஆலோசனைக் கூட்டம் வண்ணார்பண்ணை நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை மண்டபத்தில் நிகழும் யுவஹு ஆனிமீ˚ உஉ-க்உ (6-7 35) சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடைபெறும்.

அத்தருணம் தங்களைச் சமுகந்தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளுகிறேன் என ஸ்ரீ கா. அருளம்பலம் அவர்கள் தெரிவிக்கின்றார்.

# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி.

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 129777 00.

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்.

பங்குப்பணங் கட்டுமுறை.

பங்கொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு.

எச்சமயம் சராசரி 500 ரூபாவிற்குக்குறையாமல் இருக்குமானால் 3 விகித வட்டியுடன் தினசரிப்பற்றுவரவு செய்யலாகும்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்கப்படும் வட்டியும் முறையே 3 விகிதம், 4 விகிதம், 6 விகிதம், 8 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும் தொடுவாய் இராச்சியப்பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாசகவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்தியகோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். மாசந்தோறும் கட்டுபவர்களுக்கு 10 விகிதமான வட்டியும், ஏனையோர்க்கு 12 விகிதமான வட்டியும் விதிக்கப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாக் கொடுக்கலாம்.

காணி ஈடாக வைத்துக்கொண்டு பிணையுடன் கடன்கொடுக்கலாம். (இக்கடனையும் பாகம் பாகமாகக் கட்டித் தீர்க்கலாகும்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

சி. செல்லப்பா.
மானேஜர்.

(Y. 152. 21-11-34—20 11-35) (ஓ.)



# சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்துவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப் பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பிதாறு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸிலி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அரகபஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம், சாம்பிராணிபதங்கம் இன்னும், அநேக புஷ்டியான மூலிகை வகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்திற்குள் உண்டாயிருக்கும் பக்கவாயு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு. பீனிசம், கைகால் காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாயு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்தலேகியத்தைச் சாப்பிட்டு வந்தால், மேற்சொல்லிய வியாதிகள் குணமடைவதுடன் ருதுகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள் பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ரூத்தல் ஒன்றுக்கு ரூபா ௨0. அரை ரூத்தலுக்கு ரூபா பத்து கால் ரூத்தலுக்கு ரூபா ௫. தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினாங்கு முதலிய தொடுவாய் பிராச்சியப் பகுதிக்கு வீ. பி. சட்டம் இல்லாததனால் முன் மனிஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,

க. ஆறுமுகம்பிள்ளை,
வெருகல் ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை.
காத்தான்குடி போஸ்டு,
மட்டக்களப்பு.

(Y. 55 1-1-34 to 31-12-35) சிலோன்



# N. வைத்திலிங்கம் & கம்பெனி

பெரியகடைத்தெரு, யாழ்ப்பாணம்

கட்டிடங்களுக்குவேண்டிய முதல்தரமான சாமான்கள்.

ஜெர்மனி, ஜப்பான், டச்சு முதலியவிடங்களில் செய்யப்பட்ட உத்தரவாதமுள்ள சீமெந்துவகைகள், இரும்புச் சாமான்கள் வர்ணங்கள், வார்ணிஷ், கொழுக்கி ஓடுகள் இன்னும் கட்டிடத்திற்குரிய சகல சாமான்களும் எப்பொழுதும் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

கட்டிட வேலைகளைப்பற்றி எங்களிடம் யோசித்தால் சகாயமும் சௌகரியமும் கிடைக்கும்.

HEAD OFFICE:
38, 3rd Cross Street,
Colombo.

Telephone No 30.

(Y. 56. 8-2—7-2 36) ஓ



# பவுண்மார்க் ஓடுகள்.

| | |
|---|---|
| மலிவு நிறைந்த | பொலிவு நிறைந்த |
| அழகு மிக்க | புகழ்வு மிக்க |
| ஓசை கொண்ட | உயர்வு கண்ட |
| கனங் குறைந்த | காய்வு தந்த |
| சுசிவில்லாத | சூடு கொள்ளாத |
| பவுண்மார்க் | ஓடுகள் இவைகளே. |

இவை எம்மிடமன்றி வேறெவரிடத்தும் கிடைக்காதன வென்பதை மறவாதீர்.

தனிஏசண்டு: சி. வீரகத்திப்பிள்ளை அண்டு சன்ஸ்
யாழ்ப்பாணம், பருத்தித்துறை,
வல்வெட்டித்துறை, காங்கேயன்துறை.

சப் ஏசண்டுகள்: சி. க. ஆறுமுகம்பிள்ளை, காரைநகர்.
பி. ம. தம்பியையா, ஊர்காவற்றுறை.

N. B. மேற்குறித்த இடங்களில் மேற்குறித்த ஆட்களிடமே பெறலாம்.

மற்றெவரிடத்தும் இந்த ஓடுகள் இல்லை.

Phone No 93.

(Y. 57. 1-5-35 to 30-4-36)



# விளம்பரம்

நா. கந்தையா
வெந்தீஸ் மேஸ்தரும்
கோட்டுவிற்பனவு
கொம்மிஷனரும்.

கொட்டடி,
யாழ்ப்பாணம்.

(M. 3-6to 31-12-55.) தி



வியாபாரத்திற்கழகு

விளம்பரஞ்
செய்தல்.

அதற்குகந்தது
இந்துசாதனமே.



## வாலிபம் வேண்டுமா?

அப்படியெனில்
இம்மருந்தைக்
கொள்மின்!



வயோதிகத்திலும் பார்க்கக் கடனே உமது முகத்தைத் திரைக்கப்பண்ணிக் கிழவனுக்குகின்றது. கடினவேலையிலும் பார்க்க, பணவிஷயமான துன்பங்களே தீவிரத்தில் உமது வாலிபத்தைப் போக்குகின்றது. தேகசுகமும் மனச்சாந்தியும் நீர் பெறவேண்டுமானால், சேமநிதியிற் பணத்தைப் போடுதலால் எமக்குப் பாதுகாப்புண்டு என்ற உணர்ச்சி வரவேண்டும். அதுவே உமக்குப் பெருந்துன்ப நிவாரணமாம்.

ஆகஸ்மிக சந்தர்ப்பத்திற்கும், வருவாய் குறைந்த, அல்லது நின்றகாலத்திலும் தயாரயிருப்பது நீங்கள் எண்ணுகிறபடி கஷ்டமல்ல. உங்கள் செலவோடு செலவாய் எம்மிடம் பணத்தைச் சேமியுங்கள் நாங்கள் உதவிசெய்வோம்.

கோப்லன்வங்கி லிமிற்றெட்,
யாழ்ப்பாணம்.

Y. 71 23-5 to. 22-5-36



அரசாங்க அதிகாரிகளும் கவர்ன்மெண்டு மந்திரிகளும் தலைமைவகித்து நடத்திய பற்பல மெடிக்கல் கான்பரன்ஸ்களில் முதற்தர தேவ அவுஷதங்களெனத் தங்க மெடல்களும், வைத்தியபதி, வைத்திய ஆசிரியர் பட்டங்களும் பெற்றிருப்பதோடு இதர பெருங்காக்ஷி சாலைகளிலும் மருந்துகள் வைக்கப்பட்டு மெரிட் சர்ட்டிபிக்கெட்டும் தங்கமெடல்களும் பெற்றிருக்கிறது

பாரத நாட்டில்
பழமையும்
முதன்மையும்




பெற்ற
வைத்தியசாலை
இதுவே.

வீரியவிர்த்திக்கும், ஆண்டன்மைக்கும், இரத்தவிர்த்திக்கும் சி. எம். சாமி, மன்மத குளிகை:—இணையற்ற மாதிரியென யாவராலும் புகழப்பெற்ற எண்ணிக்கையிலா ஆட்களை வசப்படுத்தும் ஒப்புயர்வற்றது. மாதர்கள் மனவகை திருப்திபண்ணும் மாண்பு வாய்ந்ததென்றால் இதைப்பற்றி அதிகம் விளக்குவானேன். இது மேகச்சூடு, வெட்டை, ஆண்மைக்குறைவு, நரம்புத்தளர்ச்சி, இளைப்பு தாகம் முதலியவைகளை நீக்கும்.
20 குளிகை விலை ரூபா 2.

கெர்ப்ப எண்ணெய்:—இது ஸ்திரீகள் சஞ்சீவி என்று சொல்லலாம். மாதாந்தர வயிற்றுவலியை உடனே நிறுத்தும், சரியாய்ப் பழுதிலடையாகும், கெர்ப்பாசயம், இளைப்பை, இவற்றிலுள்ள சகல கெடுதல்களும் நீங்கி கெர்ப்பமுண்டாகும், மிக்க அனுபவமானது.
புட்டி 1க்கு விலை ரூ 2—0—0

பிரமேக நிவாரணி:—எந்த மருந்திலும் தீராத எவ்வளவு நாட்பட்டதானாலும் இதில் நிச்சயமாய்த் தீரும், பிரமேகம், இரத்தமேகம், தந்திமேகம், வெட்டை, நீர்ச்சுருக்கு, நீர்க்கடுப்பு, குத்து, எரிச்சல், நீரடைப்பு, முதலியன மூன்றுவேளையில் குணமாகும்.
புட்டி 1க்குவிலை ரூ. 2 0 0.

மாந்தரீக சத்து:—மனுஷனானவன் உலகமெங்கும் கீர்த்திவாய்ந்த இச்சத்தை அணிந்துகொண்டால் சகல வசியம், தனலாபம், விசேஷ காரியசித்தி, புத்திரசந்தானம், உத்தியோகவுயர்வு உண்டாகும். இன்னும் செய்வினை பேய் பிசாசு குழந்தைகளுக்குண்டாகும் பிணி, பிழல்சாயல் முதலியன நீங்கும். மறுபடி அனுபவமானது.
புட்டி 1க்கு விலை ரூபா 2—0—0. தபால்சார்ஸ் வேறு.

குறிப்பு:—ஏராளமான நற்சாட்சிகளை விபரமான கியாட்லாக்கில்பார்க்கவும். பினாங்கு, சிங்கப்பூர், மோரிஸ், நெட்டால், தென்ஆபிரிக்கா முதலிய பிறதேசவாசிகள் முன்பணம் அனுப்பவேண்டும். வி. பி. சிஷ்டம் முள்ள பிறதேசவாசிகள் ரூபா 5—0—0 அட்வான்சுடன் ஆர்டர் அனுப்பவேண்டும்.

(Q. 49. 9-5 to 8-8-35.) மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி.



## புகையிலைக்குப் பசளையிடுவது

சரியான முறையில் பசளை யிடுவதினால் மாத்திரமே ஏராளமான பயிரையும் திறமான சாதி இலையையும் பெற்றுக்கொள்ளலாம்.

கொழும்பு கொம்மேர்சல் கம்பனியாரின் புகையிலைப் பசளைக் கலவையைச் சரியான முறையாகப் பாவித்தால் விசேஷ லாபகரமான ஆதாயத்தைக் கொடுக்கும்.

முழு விபரங்களும் இன்னும் வேண்டிய புத்திமதிகளை இலவசமாக அறிந்துகொள்வதற்கும், கொழும்பு கொம்மேர்சல் கம்பனி லிமிற்றெற், கொழும்பு என்றவிலாசத்திற்கு எழுதவும்.

(H. 50. 13-5 to 12-11 35.) ஓ


வான்முகில்வழாதுபெய்க மலிவளஞ்சுரக்கமன்னன், கோன்முறையாசுசெய்க குறைவிலாதுயிர்கள்வாழ்க,
நான்மறையறங்களோங்க நற்றவம்வேள்விமல்க, மேன்மைகொள்சைவநீதி விளங்குகவுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM, residing at Vannarponnai West Jaffna, for and on the behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai Jaffna at their Press, Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna, on Monday the 1st July 1935.